# கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை

**சுற்றாடல் அமைச்சு**
'சொபாதம் பியச', 416/C/1,
றொபட் குணவர்த்தன மாவத்தை, பத்தரமுல்லை,
இலங்கை

2020

1- CM 33115 - 400 (2020/12) அரசாங்க அச்சுத் திணைக்களம், இலங்கை.

# கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை

வெளியீடு : சுற்றாடல் மாசடைதல் கட்டுப்பாடு மற்றும் இரசாயன முகாமைத்துவப் பிரிவு
சுற்றாடல் அமைச்சு
சொபாதம் பியச, றொபட் குணவர்த்தன மாவத்தை,
பத்தரமுல்லை.

பன்னாட்டுத் தரப்புத்தக எண் (ISBN) : 978-955-8395-50-9

அச்சீடு : அரசாங்க அச்சுத் திணைக்களம்

கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை 2019 ஒக்ரோபர் 01 ஆம் நாளன்று அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டது.

(அமைச்சரவைத் தீர்மான எண். அமப/19/2049/104/044-1 - 2019 ஒக்ரோபர் 01)



2 - CM 33115

# கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை

## உள்ளடக்கம்

பக்க இல.


1. அறிமுகம் 1

2. புதுப்பிக்கப்பட்ட தேசியக் கொள்கை ஒன்றிற்கான தேவையின் நியாயப்பாடு 3

3. நோக்கக்கூற்று 4

4. பணிக்கூற்று 4

5. இலக்கு 5

6. குறிக்கோள்கள் 5

7. வழிகாட்டற் கோட்பாடுகள் 6

8. கொள்கை அறிக்கைகள் 7

8.1 அனைத்து விதமான கழிவு வகைகளையும் உள்ளடக்குகின்ற பொதுக் கொள்கை அறிக்கைகள் 7

8.2 திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவு தொடர்பான குறிப்பான கொள்கை அறிக்கைகள் 9

8.2.1 திண்மக்கழிவு 9

8.2.2 திரவக்கழிவு 20

8.2.3 வாயுக்கழிவுகள் 23

8.3 அறிவு முகாமைத்துவம் மற்றும் திறனைக் கட்டியெழுப்புதல் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 24

8.3.1 கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் 24

8.3.2 திறன்கள் விருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி 25

8.3.3 தொழில்நுட்ப அபிவிருத்தி, பயன்பாடு மற்றும் இடமாற்றம் 26

8.3.4 உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி 27

8.3.5 ஏனைய ஆதரவுக் கொள்கைகள் மற்றும் தேசிய செயல் திட்டங்களுடனான ஒருங்கிணைப்பு 29

8.4 நிறுவனப் பொறிமுறைகள், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் ஆகியன தொடர்பான கொள்கை அறிக்கைகள் 30

8.4.1 தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரசபை மட்டங்கள் 30

8.4.2 அரசாங்க மற்றும் தனியார் துறை 31

8.4.3 சமூக மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் 32

8.4.4 கூட்டாண்மைகளைக் கட்டியெழுப்புதல் 32

8.4.5 பேரிடர் சூழ்நிலைகளில் துப்புரவாக்குதல் மற்றும் கழிவு முகாமைத்துவம் 32

8.5 கண்காணிப்பு, மதிப்பீடு, பின்னூட்டம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 33

8.5.1 கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள்/ முறைமையின் செயல்திறன் 33

8.5.2 கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களின் செயல்திறன் 34

8.5.3 அமுலாக்க அதிகார சபைகளின் செயல்திறன் 34

8.5.4 குடிமக்கள், சிவில் சமூகங்கள், சமூக அமைப்புகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்பும் திருப்தியும் 35

8.5.5 முழு நாட்டினதும் தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றம் 35

8.6 சட்ட மற்றும் அமுலாக்கப் பொறிமுறைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 35

8.7 நிதிப் பொறிமுறைகள் மற்றும் நிதிசாராச் சலுகைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 37

8.8 சர்வதேச உடன்படிக்கைகள்/ சமவாயங்களுடனான இணக்கம் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 38

8.9 முன்னோக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் 39

இணைப்பு 1 41

இணைப்பு 2 66

# கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை

## நடைமுறைப்படுத்தப்படும் திகதி: 2019 ஒக்டோபர் 01

## அறிமுகம்

தற்போது எதிர்கொள்ளப்படுகின்ற துரிதமாக மோசமடைந்து வருகின்ற கழிவு தொடர்பான பிரச்சினைகள் காரணமாக முழுமையான கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை யானது எமது நாட்டில் அதிகளவில் உணரப்பட்டுள்ளது. இக் கொள்கை ஆவணமானது அத்தகைய தேவையினை நிறைவேற்றும் பொருட்டுத் தயாரிக் கப்பட்ட ஒன்றாகும். சட்ட ரீதியாகக் கட்டுப்பட்டுள்ள அரச நிறுவனங்கள், ஏனைய சேவை வழங்குநர்கள் மற்றும் தனியார் துறை உள்ளடங்கலாக ஏனைய நிறுவனங்களுக்கும் வழிகாட்டுதலை வழங்குவதற்குக் கவனத்திற் கொள்ளப்பட்ட கொள்கை அறிக்கைகளுடன் கூடிய பரந்துபட்ட கட்டமைப் பினுள் வழிகாட்டுதல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இக் கொள்கையானது திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவுகள் உள்ளடங்கலாகக் கழிவின் அனைத்து வகைகளையும் கருத்திற் கொள்கின்றது. தமது கடமை களைக் கழிவு முகாமையாளர்கள் உயர்மட்டப் பொறுப்புடனும் பொறுப்புக் கூறலுடனும் நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்குக் கழிவு முகாமைத் துவத்தில் சமூகத்தின் கட்டாயத் தலையீடானது முக்கியமானதொரு உள்ளீடாக இனங்காணப்படுகின்றது. அரசியலமைப்புக் கடப்பாடுகளின் நோக்கில், ''இயற்கை மற்றும் அதன் வளங்களைப் பாதுகாப்பது இலங்கை யிலுள்ள ஒவ்வொரு தனிநபரினதும் கடமையாகும்''.

இச் சந்தர்ப்பத்தில் அதிகம் தேவைப்படுகின்ற சமூக மாற்றத்தினூடான பேண்தகு கழிவு முகாமைத்துவத்திற்கான உயர்மட்ட ஒத்துழைப்பு மற்றும் பொறுப்புணர்வு என்பவற்றினைப் பாதுகாப்பதற்குப் பொதுமைப்படுத்தப்பட்ட ஆனால் வேறுபட்ட பொறுப்புக் கோட்பாடு பற்றி இக்கொள்கை ஆவணத்தில் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் உற்பத்தியாளர்/இறக்குமதி யாளர்/விற்பனையாளர் மற்றும் நுகர்வோர் உள்ளிட்ட அனைத்து மட்டங் களிலும் பொறுப்பான கழிவு முகாமைத்துவம் இடம்பெறுவதை உறுதிப் படுத்துவதற்கு விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் (EPR) பயன் பாட்டை ஒரு பொறிமுறையாகக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றி இக் கொள்கை குறிப்பிடுகின்றது.

செயல்திறன் மிக்க கழிவு முகாமைத்திற்கான தேசிய மட்டப் பற்றுறுதியானது ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதுடன் தொடர்புபடுகின்றது; அவையாவன 3ஆவது இலக்கு (அனைத்து வயதிலு முள்ள அனைவருக்கும் சுகாதாரமான வாழ்க்கையை உறுதி செய்தலும் நலவாழ்வை ஊக்குவித்தலும்), 6ஆவது இலக்கு (அனைவருக்கும் நீரின் கிடைப்பனவு மற்றும் பேண்தகு முகாமைத்துவம் மற்றும் துப்பரவினை உறுதி செய்தல்), 11ஆவது இலக்கு (நகரங்கள் மற்றும் மக்கள் குடியேற் றங்களை முழுமையானதாகப், பாதுகாப்பானதாக, நெகிழ்வுத் தன்மை யுள்ளதாக மற்றும் பேண்தகைமையுள்ளதாக ஆக்குதல்), 12ஆவது இலக்கு

(பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்திக் கோலங்களை உறுதி செய்தல்), 14ஆவது இலக்கு (பேண்தகு அபிவிருத்திக்காகச் சமுத்திரங்கள், கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களைப் பாதுகாத்தலும் பேண்தகு முறையில் பயன்படுத்தலும்), 15ஆவது இலக்கு (தரைச்சூழல் தொகுதிகளின் பேண்தகு பயன்பாட்டைப் பாதுகாத்தல், மீட்டல் மற்றும் ஊக்குவித்தல், காடுகளைப் பேண்தகைமையோடு பராமரித்தல், பாலைவனமாக்குதலை எதிர்த்தல் மற்றும் நிலத் தரமழிவை தடுத்தலும் பழைய நிலைக்கு மாற்றுதலும் மற்றும் உயிர்ப்பல்வகைமை இழப்பைத் தடுத்தல்) மற்றும் 8ஆவது இலக்கு (நீடித்து நிலைத்த, முழுமையான, மற்றும் பேண்தகைமையுள்ள பொருளாதார வளர்ச்சி, முழுமையான மற்றும் உற்பத்தித் திறன் மிக்க, அனைவருக்கும் தொழில்வாய்ப்பு மற்றும் ஒழுக்கமான வேலை). அத்துடன் அது காலநிலை மாற்றங்களைக் குறைத்தல் மற்றும் அதற்கேற்ப மாற்றிக்கொள்ளுதலுக்கான தேசிய ரிதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் ஏனைய சர்வதேச சுற்றாடல் சமவாயங்களை நடைமுறைப்படுத்தும் வசதியையளிக்கின்றது. வலுவான ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கையிடல் தொகுதியினூடாக நாடு முழுவதும் விளைதிறனுள்ள வளச் சுழற்சியை நிச்சயப்படுத்தும் நோக்குடன் கழிவு உருவாக்கப்படும் காரணத்தை உறுதிப்படுத்துவதற்காக எங்கே, எவ் வகை மற்றும் எந்தளவு கழிவு உருவாக்கப்படுகின்றது என்பதை மதிப்பிட அது தேவையானதாகும். இச் செயற்பாட்டில் முக்கியமாக நினைவில் கொள்ளவேண்டியது மற்றைய எல்லாக் கழிவு முகாமைத்துவ உத்திகளை யும் விட முழுமையாக வளப் பாதுகாப்பை அதிகரிக்க அதிகளவு சாத்தியம் கொண்ட கழிவு உருவாக்கத் தவிர்ப்பே அடிப்படையான தொடக்க நிலைத் தேவையாகும்.

இக் காரணிகள் அனைத்தும் உயர் மட்டப் பொறுப்புடனும் பொறுப்புக் கூறலுடனும் நாட்டின் கழிவு முகாமைத்துவத்திற்காக அனைத்துத் தரப்பின ராலும் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் செயற்பாட்டிற்கும் வழிகாட்டு வதற்குச் சிறந்த சட்டப் பொறிமுறையுடன் கூடிய ஒரு வலுவானதும் முழுமையானதுமான தேசியக் கொள்கை தேவை என்பதைக் காட்டுகின்றன.

## 2. புதுப்பிக்கப்பட்ட தேசியக் கொள்கை ஒன்றிற்கான தேவையின் நியாயப்பாடு

மாநகரக் கழிவு தொடர்பாக அதிக கவனத்துடன் கூடிய திண்மக்கழிவு முகாமைத்துவதிற்கான வசதிகளை வழங்கும் நோக்கில் சுற்றாடல் அமைச்சு 2000ஆம் ஆண்டு திண்மக்கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய உத்திகள் மற்றும் 2007ஆம் ஆண்டில் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கை என்பவற்றை உருவாக்கியிருந்தது. எனினும் பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு வகையான கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளை வெற்றிகர மாகவும் தோல்விகரமாகவும் மேற்கொள்கின்றன. நாடளாவிய ரீதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட கழிவு முகாமைத்துவத் தொகுதியினுள் முரண்பாடற்ற இறுதி அகற்றுதல் வசதிகள் காணப்படாமை உள்ளடங்கலாகப் போதிய மற்றும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாமை என்பவை இத் தோல்விகளுக்கான முதன்மைக் காரணங்களாகும்.

இந்தப் புதுப்பிக்கப்பட்ட கொள்கையானது நாட்டின் நிர்வாக மற்றும் முகாமைத்துவக் கட்டமைப்புகளின் கிடை மற்றும் நிலைக்குத்து மட்டங் களை உள்ளடக்கிக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நடைமுறைப் படுத்துபவர்கள் ஆகியோருக்கு விளக்கமான மையப்படுத்தப்பட்ட வழி காட்டுதல்களை வழங்குவதன் மூலம் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத் தொகுதி ஒன்றினை நிறுவுவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ் வடிவமைப்பில் கடந்த காலங்களில் முகங்கொடுக்கப்பட்ட பல்வகைச் சவால்கள், தற்போது முகங்கொடுக்கப்படுகின்றவை மற்றும் எதிர் காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற சவால்கள் என்பவை கருத்தில் கொள்ளப் பட்டுள்ளன. இக்கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக முன்மொழியப் பட்டுள்ள கால வரையறை 2030 வரையானதாகும்.

மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு (e-waste), சுகாதார சேவைக் கழிவு, கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மற்றும் ஏனைய தீங்கு விளைவிக்கும் கழிவு போன்றவை மாநகரத் திண்மகழிவுகளுக்கு மேலதிக மாக முன்னுரிமைக் கவனம் வழங்கப்பட வேண்டிய கழிவுகளாக இக் கொள்கையில் கருதப்படுகின்றன. அண்மித்த கடந்த காலத்தில் இவ்வகைக் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் சுகாதார சேவைக் கழிவுச் சுத்திகரிப்பு வசதிகள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வசதிகள் பொருத்தமான கொத்தணியாக்கம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட திண்ம மற்றும் திரவக்கழிவு அகற்றல் பொறிமுறைகள் மேம்படுத்தப்படல் / நிறுவப்படல் மூலம் இவ்வசதிகளின் பயன்படு திறன் அதிகரிக்கப்படுவதுடன் இது சுகாதாரத் துறையின் தேவைகளை நிறை வேற்றிக் கொள்ள உதவும். இந் நிலையை அடைவதற்குக் குறிப்பானதும் தொடர்புள்ளதுமான உப-துறைசார் கொள்கைகள் மற்றும் உத்திகள் என்பன தேவைப்படுகின்றன. எவ்வாறாயினும், கழிவுப் பொருட்களை எரியூட்டுவதன் மூலம் உருவாக்கப்படுகின்ற சாம்பல் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருளாக வகைப்படுத்தப்பட்டுள்ளமையினால் அதனைச் சூழல் நேயமிக்க முறையில் அகற்றுவதற்குத் தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்காக

ஒதுக்கப்பட்ட இறுதி அகற்றுதல் வசதிகள் தேவைப்படுகின்றன. தற்போது காணப்படுகின்ற அகற்றுதல் வசதிகள் நாட்டில் உருவாக்கப்படுகின்ற அனைத்துத் தீங்கு விளைவிக்கும் கழிவுகளையும் அகற்றுவதற்குப் போது மானவையாக இல்லை.

இக்கொள்கையில் கருதப்பட வேண்டிய ஒரு முக்கிய சவாலாக அமைவது, உயர்மட்டப் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலுடன் கழிவு அகற்றல் செயற் பாடுகளை உள்ளெடுப்பதற்கு, ஒருங்கிணைப்பதற்கு மற்றும் தொடர்வதற்குத் தொகுதியில் நிலவும் பலவீனங்களை முழுமையாகக் சீர்செய்வதாகும். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட ஈர்க்கக்கூடிய பல்வேறு ஆதார உள்ளீடுகள் அதிகளவு சிதறலடைந்ததுடன் எதிர்பார்க்கப்பட்டளவு பேண் தகைமையோடு தொடரப்படவில்லை, அத்துடன் நிதியாதாரங்கள் நிறுத்தப் பட்டாலோ அல்லது தலைமைத்துவம் மாற்றப்பட்டாலோ அல்லது இரண்டினாலுமோ தொகுதிகள் சரிவடைந்தன. இதற்கான முதன்மைக் காரணமாவது பின்னூட்ட அணுகலோடு கூடிய பேண்தகு கண்காணிப்பு, மதிப்பீடு, பதிவு செய்தல் என்பன காணப்படாமையாகும். இத் தொகுதிகளிலுள்ள குறைபாடுகளின் காரணமாக எதிர்கொள்ளப்படுகின்ற முக்கிய சவால்களில் ஒன்றாகக் கழிவு முகாமைத்துவத்தில் விவேகமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான நம்பகத்தன்மையுள்ள தரவுகள் மற்றும் தவறாது புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆகவே, ஒரு நல்ல, நிலையுறுதியுள்ள மற்றும் பேண்தகு தேசிய முறை மையை நிறுவுவதற்காகவும் அதனுள் வெவ்வேறு பங்குதாரர்கள் ஒரே குடையின் கீழ் வெவ்வேறு மட்டங்களில் செயற்படும் வகையிலும் திண்ம, திரவ, வாயுக் கழிவுகள் உள்ளடங்கலாகக் கழிவின் அனைத்து வகைகளை யும் உள்ளடக்கும் ஒரு தொகுதித் தேசிய கொள்கைகள் இக் கொள்கை யினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு பங்குதாரர்களாலும் நன்கு விளங்கிக் கொள்ளப்படும் வகையிலும் முறைமையைப் பலப்படுத்தும் வகை யிலும் கழிவு முகாமைத்துவத்தின் பல முக்கிய உத்திகள் விளக்கமான கொள்கையாக விசாலப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த துறைசார் கொள்கை களும் உத்திகளும் அவற்றை வெவ்வேறு மட்டங்களில் விளைதிறனுடன் நடைமுறைப்படுத்தும் வகையில் முன்னணித் துறைசார் நிறுவனங்களால் (பின்னிணைப்பு 1) தேவைக்கேற்ப உருவாக்கிக்கொள்ளப்படலாம். இதன் குறிக்கோளாவது முதலிலேயே முறைமையை / முறைமைகளைச் சரியான திசையில் ஆற்றுப்படுத்துவதுடன் பேண்தகு தீர்வுகளிலிருந்து விலகா வண்ணம் முறைமையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்தலுமாகும்.

### 3. நோக்கக்கூற்று

சுகாதாரமான வாழ்க்கை மற்றும் சுத்தமான சுற்றாடல் என்பவற்றுக்காகக் கழிவைப் பேண்தகு முகாமை செய்தல்.

### 4. பணிக்கூற்று

வளப் பாதுகாப்பு மற்றும் சுழற்சியினை ஊக்குவிப்பதன் மூலம் ஒரு சூழல் நேயமிக்க நாட்டை உருவாக்குதல்.

## 5. இலக்கு

நம்பகத்தன்மையுள்ள பொறுப்புக்கூறலுடன் கூடிய 2030 வரையான இடைக் கால மற்றும் நீண்டகாலப் பேண்தகு தீர்வுகளுக்கமையக் கடுமையான குறுங்காலச் சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியவாறு கழிவின் அனைத்து வகைகளையும் உள்ளடக்கும் வகையில் நாட்டின் கழிவு முகாமைத்துவத்திற் கான ஒத்திசைவுள்ள மற்றும் விரிவான ஆற்றுப்படுத்தல்களை வழங்குதல்.

## 6. குறிக்கோள்கள்

6.1 அனைத்துக் குடிமக்கள் மற்றும் நிறுவனங்களைக் கழிவுகளை உருவாக்குபவர்கள் என்ற வகையில் அவர்கள் அதில் ஈடுபடு வதன் அளவிற்கேற்பக் கழிவு முகாமைத்துவத்தில் சட்டரீதி யாகப் பொறுப்பேற்கச் செய்தல்.

6.2 குடிமக்கள், நிறுவனங்கள் கழிவு முகாமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோர் உடன்பாட்டுக்கு மேலதிக மாகக் கழிவு உருவாவதைத் தடுத்தல் மற்றும் குறைத்தல் மூலம் தனித்தனியாகவும் கூட்டாகவும் கழிவு முகாமைத்துவம் செய்வதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்களாகவும் பொறுப்புடன் நடந்து கொள்பவர்களாகவும் இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி உணர்த்துதல்.

6.3 சூழல் நேயமிக்க முறையிலான கழிவுப் பொருட்களின் சுத்தி கரிப்பு மற்றும் இறுதி அகற்றுதல் என்பவற்றிற்கான வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவை பொறுப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் பேண்தகு இயக்கம் மற்றும் பராமரிப்பை நிச்சயப்படுத்தும் வகையில் உறுதிப்படுத்துதல்.

6.4 வாழ்க்கை வட்டம் முழுவதும் கழிவின் வளப் பயன்பாட்டுப் பெறுமதியைத் தக்கவைக்கும் வகையில் கழிவின் இறுதி அகற்றுதலைக் குறைப்பதற்கு இயன்ற அனைத்து முயற்சிகளை யும் மேற்கொள்ளுதல்.

6.5 தற்போதுள்ள கழிவு முகாமைத்துவ முறைமைகள்/ நடைமுறை களின் விளைதிறன் மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதுடன் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் நடைமுறைகளுடன் கழிவுகளைத் தவிர்த்தல், தடுத்தல் மற்றும் குறைத்தலுக்கான புதிய முறைமைகளை ஊக்குவித்தல்.

6.6 தற்போதுள்ள பொருத்தமான சந்தைகளின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்துதல், பொருத்தமான புத்தாக்கத் தொழில்நுட்பங்கள் மற்றும் கூட்டாண்மைகளுடன் புதிய சந்தைகளை ஊக்குவித்தல் மற்றும் முழுமையான ஒருங் கிணைந்த கழிவு முகாமைத்துவ முறைமைகள்/நடைமுறை களுக்கு வசதியேற்படுத்துதல்.

6.7 பொதுச்சுகாதாரம், சுற்றாடல் மற்றும் சூழல் முறைமைகளுக் கான இடர்களைக் குறைத்தல் மற்றும் கழிவைக் கையாள்பவர் களின் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தல்.

6.8 உடன்பாட்டுக்கு மேலதிகமாகக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பிணைப்புகளை நிறைவேற்றும் வகையில் விளைதிறனுள்ள கூட்டாண்மையை மேம்படுத்துதல்.

## 7. வழிகாட்டற் கோட்பாடுகள்

7.1 நாட்டின் அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடைய பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புடன் உடன்படுவதும் கழிவு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களில் ஈடுபடு வதும் அனைவருக்கும் சுகாதாரமான வாழ்க்கை ஒன்றிற்காகக் கழிவு முகாமைத்துவம் செய்வதன் அடிப்படைத் தொடக்க நிலைத் தேவையாகும்.

7.2 வளப் பயன்பாடு மற்றும் கழிவு முகாமைத்துவத்தின் தேவை அடிப்படையில் விவேகமான நடத்தையை ஏற்படுத்த மற்றும் வலுப்படுத்துவதற்குச் சமூக முறைமைகளுக்குள் படிப்படியாக மதிப்புகளைப் புகுத்துவதற்குச் சட்ட ஏற்பாடுகள் அவசியமான தாகும்.

7.3 கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கான படிமுறைகள் சூழல் நேயமிக்கவையாகவும், தேசிய ரீதியில் பொருத்தமான வையாகவும், சமூக ஏற்புள்ளவையாகவும், பொருளாதாரச் சாத்தியமுள்ளவையாகவும் இருக்கவேண்டும்.

7.4 கழிவு முகாமைத்துவ முறைமைகள் பூச்சியக் கழிவு எண்ணக் கருவிற்கு ஏற்ப இடம்பெறுவதுடன் உற்பத்திகள் மற்றும் செயற் பாடுகளின் வாழ்க்கை வட்ட முகாமைத்துவம் மற்றும் முடிந்தளவு சாத்தியமான பொருத்தமான தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டவையாக இருக்கவேண்டும்.

7.5 தற்போதுள்ள சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருத்தமான 3R கோட்பாடு போன்ற கழிவு முகாமைத்துவ எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் விரிவாக் கங்கள் உகந்த மற்றும் பொறுப்புணர்வுள்ள சமூக மாற்றம் ஒன்றிற்கான அடிப்படைத் தொடக்கநிலைத் தேவையாக 'மீள்-சிந்தனை' தேவைப்படக்கூடிய கழிவு தடுத்தல்/தவிர்த்தல் அணுகுமுறைகள் மீதான குறித்த வலியுறுத்துகையுடன் செயற் படுத்தப்படும்.

7.6 பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்தியால் கழிவு முகாமைத் துவத்தின் தற்போது காணப்படுகின்ற மற்றும் எதிர்காலச் சவால்களுக்கு வெற்றிகரமான முறையில் முகங்கொடுக்க முடியும்.

7.7 உற்பத்திகள், உற்பத்திச் செயற்பாடுகளின் வாழ்க்கை வட்டம் மற்றும் சேவை வழங்கலுடன் "மாசுபடுத்துபவர் செலுத்துவார் கோட்பாடு" மற்றும் "உற்பத்தியாளரின் விரிவாக்கப்பட்ட பொறுப்பு" உள்ளிட்ட சந்தையை அடிப்படையாகக் கொண்ட கருவிகளின் பயன்பாடு வளங்கள் மற்றும் பொருளாதார வினைத் திறனை அதிகப்படுத்தும் விளைதிறனுள்ள கழிவு முகாமைத் துவக் கருவிகளாக அடையாளம் காணப்படும்.

7.8 தவறான கழிவு முகாமைத்துவத்தைத் தவிர்த்தலானது சுத்தமான மற்றும் சுகாதாரமான சுற்றாடலுக்கு இட்டுச்செல்வதன் மூலம் அனைவருக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழி வகுக்கின்றது.

## 8. கொள்கை அறிக்கைகள்

### *8.1 அனைத்து விதமான கழிவு வகைகளையும் உள்ளடக்குகின்ற பொதுக் கொள்கை அறிக்கைகள்*

8.1.1 கழிவு என்பது விலக்கப்படுகின்ற அல்லது அழிக்கப்படுகின்ற அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது ஒரு குறிப் பிட்ட இடத்தில் அல்லது வடிவத்தில் தொடர்ந்தும் பயன் பாட்டுக்கு தேவைப்படாது எனக் கருதப்பட்டு வளமாகப் பயன் படுத்தப்படக்கூடிய அல்லது பயன்பாட்டுப் பெறுமதி அற்றதாயின் சுற்றாடல் ரீதியாகச் சிறந்த முறையில் சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படக்கூடிய ஏதேனும் ஒரு பொருள் அல்லது பக்க விளைபொருளாகும்.

8.1.2 நாடு முழுவதிலும் கழிவு முகாமைத்துவ முறைகளை மேம்படுத் துவதற்குக் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு முறைமை, பொருளா தாரக் கருவி மற்றும் தன்னார்வப் பங்களிப்பு போன்ற பலவித உத்திகள் பொருத்தமானவையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

8.1.3 வளப் பயன்பாட்டில் வாழ்க்கை வட்டச் சிந்தனையுள்ள சுய-பொறுப்புள்ள சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்புவதை இலக் காகக் கொண்டு கழிவு உருவாக்கத்திற்கான காரணத்தை உறுதி செய்வதற்கான சாத்தியங்களாக எங்கு, எவ்வகை மற்றும் எவ்வளவு கழிவு உருவாக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்குப் பின்தொடரக்கூடிய முறைமைகளுடனான முறையான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

8.1.4 கழிவுக் கலவை மற்றும் மூலத்துடன் கழிவு உருவாக்கப் படுகின்ற அளவினை அடையாளம் காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றிற்கான பொறிமுறைகளை முன்னணி நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகள் உருவாக்க வேண்டும்.

8.1.5 கழிவு உருவாக்கப்படும் இடங்களில் இருந்து உரிய நேரத்தில் அவற்றினை அகற்றுதல் மற்றும் அவற்றினை அகற்றுவதற்குப் பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் என்ப வற்றின் மூலம் திறந்த குப்பை குவிப்புச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான பேண்தகு பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

8.1.6 தம் இயக்கத்திற்காக ஆகக் குறைந்த தொடர்ச்சியான கழிவு வழங்கல் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளானவை உரிய கழிவு முகாமைத்துவத்தின் காரணமாகச் சாத்தியப்படும் கழிவுருவாக்கத்தின் கீழ் நோக்கிய போக்குகள் அதேபோல் பொருளாதார அபிவிருத்தியின் விரிவாக்கத்தின் காரணமாகத் தவிர்க்க முடியாதுள்ள மேல்நோக்கிய போக்குகள் என்ப

வற்றினைச் சமப்படுத்தும் வகையில் கழிவுத் தடுப்பு உத்திகளுக்குத் தடை ஏற்படுத்தாத வகையில் கிடைப்பனவுள்ள மிகக்குறைந்த கழிவு உருவாக்கத்தைக் கருத்திற்கொண்டு கவனமாக உருவாக்கப்பட வேண்டும்.

8.1.7 வாழ்க்கை வட்டம் முழுவதும் பொருத்தமான கழிவு முகாமைத்துவப் படிநிலையைப் பயன்படுத்துவதன் மூலம் குறுகிய, இடைக் கால மற்றும் நீண்டகால உத்திகள் மற்றும் செயலாக்கத் திட்டங்கள் இறுதிக்கட்டத்தில் அகற்றப்படும் கழிவைக் குறைக்கும் வகையில் முன்னணி நிறுவனங்கள் மற்றும் முகவராண்மைகளால் உருவாக்கப்பட வேண்டும்.

8.1.8 எல்லா வகையான பின்-நுகர்வோாக் கழிவுகளின் இறக்குமதி தடை செய்யப்பட வேண்டும்.

8.1.9 தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உருவாக்குபவர்கள் கண்காணித்தல், பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளுடன் கழிவுகளின் முறையான சேகரிப்பு, சேமிப்பு, இடமாற்றம், சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் ஆகியவற்றை நிச்சயப்படுத்துவதற்குப் பொறுப்பாளியாக்கப்பட வேண்டும்.

8.1.10 எல்லா நிலைகளிலும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் வள வினைத்திறன்களை மேம்படுத்தவும் சுத்தமான உற்பத்தி நுட்பங்களின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

8.1.11 முன்னணி அமைச்சுகள் மற்றும் முகவராண்மைகளால் தேசிய, மாகாண, உள்ளூர் அதிகார சபை மட்டங்களில் பயன்படுத்துவதற்காக அனைத்து வகையான கழிவுப் பிரிவுகளுக்காகவும் அனைத்து வகையான கழிவுப் பாய்வுகளை உள்ளடக்கும் வகையில் தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டல்கள் மேம்படுத்தப்படவும் தேவையான இடங்களில் புதிய வழிகாட்டல்கள் உருவாக்கப்படவும் வேண்டும்.

8.1.12 சுத்தமான மற்றும் மகிழ்ச்சி தரக்கூடிய சுற்றாடலைப் பேணி வருவதற்காக அங்கங்குக் குப்பை போடுதல் முறையான வலுவூட்டல் பொறிமுறை ஒன்றினால் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட வேண்டும்.

8.1.13 கைத்தொழிற்சாலைகள், கழிவு முகாமைத்துவ முகவராண்மைகள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் அனைத்துக் கழிவு முகாமைத்துவ ஊழியர்களுக்கும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முறைமைகளின் உருவாக்கமும் நடைமுறையும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

8.1.14 அனைத்து வகையான கைத்தொழில்சார் கழிவுகளுக்கும் உருவாக்குபவர்களால் இடர் மதிப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்கமைப்புகளின் உருவாக்கம் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

8.1.15 கைத்தொழிற்சாலைகள், கழிவு முகாமைத்துவ நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மூலம் பொருத்தமான பொறுப்பு மற்றும் இழப்பீடுகள் ஊடாகப் பொது மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

8.1.16 நாடளாவிய ரீதியில் வினைத்திறனுள்ள கழிவு முகாமைத் துவத்தை உறுதிப்படுத்த விளைதிறனுள்ள மற்றும் பேண்தகு வள நகர்வு உத்திகள் உருவாக்கப்பட வேண்டும்.

8.1.17 அனைத்துப் பங்குதாரர்களுக்கும் தேசிய கொள்கையுடன் இணங்கக்கூடிய வகையில் துணைத்-துறைசார் கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

8.1.18 கழிவுகளின் அனைத்து வகைகளையும் உள்ளடக்குகின்ற இக் கொள்கை அறிக்கைகள் திண்ம மற்றும் திரவங்களின் பண்பு களைக் கொண்ட; பாகுநிலை கூடிய அரைத் திண்மக்கழிவு களுக்கும், மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதிக்கப் பட்ட வழிகாட்டுதல்களுக்கு ஏற்பப் பொருத்தமானவையாகப் பயன்படுத்தப்படலாம்.

8.1.19 சவால்களை இனங்காணல், உத்திகளை உருவாக்கல் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றின் ஊடாக இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து முகவராண்மைகளுக்கும் தேசிய கொள்கையுடன் இணங்கக்கூடிய வகையில் உத்திமுறைச் செயல் திட்டங்களின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தல் கட்டாயமாக்கப்படும்.

## *8.2 திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவு தொடர்பான குறிப்பான கொள்கை அறிக்கைகள்*

### *8.2.1 திண்மக்கழிவு*

**1. மாநகரத் திண்மக்கழிவு**

அ) பின்னூட்டப் பொறிமுறைகளுடன் விளைதிறனாகவும் வினைத் திறனாகவும் மாநகரத் திண்மக்கழிவினை உரிய முறையில் ஒன்று திரட்டுவதற்காக அனைத்து வீடுகள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களின் செயற்படுநிலை ஈடுபாடு உள்ளூர் அதிகார சபைகளால் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

ஆ) உள்ளூர் அதிகார சபைகளால் சமூகப் பங்களிப்புடன் கழிவு சேகரிக்கும் நேர அட்டவணைகள் உருவாக்கப்படுவதுடன் யாதேனும் ஒரு நேர மாற்றம் அல்லது தாமதம் ஏற்படுகையில் கழிவு இடத்திற்கு இடம் குவிக்கப்படுவதை அல்லது முறையற்ற விதத்தில் அகற்றப்படுவதைத் தடுக்கும் பொருட்டு எண்ணிமத் (Digital) தொழில்நுட்பம் அல்லது வேறு பயனர்-நேய முறையைப் பயன்படுத்தி முன்கூட்டியே மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இ) உள்ளூர் அதிகார சபைகளால் இயன்றளவு வீட்டுக் கழிவுகளின் பயன்பாட்டுப் பெறுமதியினை மீளப் பெற்றுக் கொள்ளும் வகையில் கழிவு உருவாவதைத் தடுத்தல் மற்றும் அதன் அளவினை உருவாகும் இடத்தில் குறைத்தல், மேலும் உருவாக்கப்படும் இடத்தின் அடிப்படையில் பிரித்துப் பின்னர் வகைப்படுத்துதல் என்பவற்றை ஊக்குவிக்கும் பொருட்டுப் பொருத்தமான உத்திகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஈ) விவசாய அமைச்சு மற்றும் ஏனைய பங்குதாரர்களின் ஒத்துழைப் புடன் முறையான தரக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் வழி காட்டல்களுடன் மாநகரக் கழிவிலிருந்து உற்பத்தி செய்யப்படு கின்ற கூட்டெருப் பாவனையை ஊக்குவிப்பதற்கான சந்தைப் பொறி முறையொன்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றினால் உருவாக்கப்பட வேண்டும்.

உ) விழாக்கள் மற்றும் ஏனைய சிறப்பு நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப் பாளர்கள் உள்ளூர் அதிகார சபைகளின் ஒத்துழைப்புடன் அவ்வா றான நிகழ்ச்சிகளில் உருவாகக்கூடிய கழிவை முகாமை செய்வதற்குப் பொறுப்பாக்கப்படுவதுடன் அவ்வாறான நிகழ்ச்சி களுக்கு முன்னராகவே மேலதிக நிதித் தேவைகளைப் பொறுப் பேற்கக்கூடிய ஏற்பாடுகளுடன் உள்ளூர் அதிகார சபைகளுடன் பொருத்தமான ஒப்பந்தங்கள் கைச்சாத்திட வேண்டும்.

ஊ) காணி நிரப்புகையானது மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாத, கூட்டெரு வாக்கப்பட முடியாத மற்றும் கழிவுச் சுத்திகரிப்புச் செயற்பாடுகளின் ஊடாக உருவாக்கப்படும் செயலற்ற பொருள்களுக்கு மட்டுப்படுத் தப்படவேண்டும்.

எ) (1) உள்ளூர் அதிகார சபைகளால் ஒன்று திரட்டப்படுகின்ற கழிவின் அளவு மற்றும் உள்ளடக்கப்படுகின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை (2) கழிவுகளின் தவணைமுறைக் குறைப்பு (3) காணி நிரப்புகைத் தளங்களில் அகற்றப்படுகின்ற கழிவுகள் என்பன பற்றிய தரவுத் தளங்களின் உருவாக்கமும் பராமரிப்பும் அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

ஏ) சேமிப்பிற்குரிய மற்றும் சுத்திகரிப்பு வசதிகளுக்கான வசதி யான இடங்களைக் காலத்திற்குக் காலம் வழங்குதல், அவற்றுக் குரிய வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் சுற்றாடல் மாசடைதல் மற்றும் மக்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு கழிவு, மனிதக்கழிவு அல்லது அவற்றையொத்த பொருளும் அகற்றப் படாதிருப்பதை உறுதி செய்வதற்கான ஏனைய அனைத்து அளவீடு களையும் முற்காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் என்ப வற்றிற்காக உள்ளூர் அதிகார சபைகள் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஐ) மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகளைக் கொத்தணிப் படுத்துவதன் மூலம் உள்ளூர் அதிகார சபைகளுக்கு உதவும் பொருட்டுக் கழிவு அகற்றுதலுக்கான பொருத்தமான இடங்களை அடையாளம் கண்டு வழங்குவதுடன் சுற்றாடல் நேயமிக்க முறை யில் கழிவகற்றுவதை நிச்சயப்படுத்த வேண்டும்.

ஒ) கழிவுச் சுத்திகரிப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுதல் மற்றும் சுற்றாடல் நேயமிக்க முறையில் கழிவகற்றப்படுதல் என்பவற்றை உறுதி செய்யும் பொருட்டு உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் மாகாண சபைகளுக்குத் தேசிய மட்டத்தில் வழிகாட்டப்பட வேண்டும்.

ஓ) வள மீட்பை அதிகரித்தல் மற்றும் கழிவு இடத்திற்கு இடம் குவிக்கப் படுதல் மற்றும் முறையற்ற விதத்தில் அகற்றப்படுதலைத் தடுத்தல் என்பவற்றுக்காக மாசுபடுத்துபவர் செலுத்துவார் எனும் கோட்பாடு மற்றும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புக் கோட்பாடு என்பவற்றினைப் பயன்படுத்தும் வகையில் பொருத்தமான கருவிகள் மற்றும் உத்திகள் இனங்காணப்பட வேண்டும்.

ஔ) இறைச்சி அறுப்புக்கூடக் கழிவுகளைப் பொது மாநகரக் கழிவுகளுடன் ஒன்று சேர்க்காதிருப்பதுடன் உள்ளூர் அதிகார சபைகளின் ஆலோ சனைக்கேற்ப சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படாத வாறு கழிவை உரியவாறு முகாமைத்துவம் செய்தல் மற்றும் அகற் றுதல் என்பவற்றுக்காக அவற்றினை உருவாக்குபவர்கள் பொறுப்பாக் கப்பட வேண்டும்.

க) மாகாண சபைச் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பவற்றின் ஒத்துழைப்புடன் வீட்டுத் துப்புரவு சார் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான பொறிமுறைகளை உள்ளூர் அதிகார சபைகள் உருவாக்க வேண்டும்.

ங) வீடுகளிலிருந்தான கேள்விக்கேற்ப மொத்தக் கழிவுகளைச் சேகரித்தல் மற்றும் அவற்றை மத்திய சுற்றாடல் அதிகார சபை யினால் விதிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கமைவாகச் சுற்றாடல் நேயமிக்க முறையில் பாதுகாப்பாக அகற்றுதல் என்பவற்றுக்கான பொறிமுறைகள் உள்ளூர் அதிகார சபைகளால் உருவாக்கப்பட வேண்டும்.

ச) வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மேலும் கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோரினால் எக்கழிவும் முறையற்ற விதத்தில் அகற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டுக் கழிவுக் கண்காணிப்பு முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஞ) உள்ளூர் அதிகார சபைகள், வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், ஏனைய கழிவு முகாமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து தாம் வழங்குகின்ற சேவைகள் பற்றிய பின்னூட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுப் பயனர்-நேயத் தொடர்பாடல் மாதிரிகளை உருவாக்குவதுடன் ஒருவருக்கொருவர் ஒருவர் ஒத்துழைப்பதன் மூலம் சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளை சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ட) தேசியக் கொள்கைக்கு அமைவாக மாகாண சபைகளுடன் ஒத்துழைத்துச் செயல்திறன் சுட்டிகளுடனான கால வரையறைக்குட் பட்ட (குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால) செயல் திட்டங் களை உள்ளூர் அதிகார சபைகள் உருவாக்கி அவற்றை மாகாண சபைகளுக்கும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல் களுக்குப் பொறுப்பான அமைச்சுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

த) மாகாண சபைகள் உள்ளூர் அதிகார சபைகளுடன் ஒத்துழைப்புடன் உள்ளூர் மட்டத் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட இக் கொள்கைக்கு அமைவான முதன்மைத் திட்டங்களை உருவாக்கு வதுடன் இப் பிரதான திட்டங்களைப் பேண்தகு முறையில் நடை முறைப்படுத்துவதற்காக வலிமையான முறைமையொன்றினை நிறுவ வேண்டும்.

ப) உள்ளூர் அதிகார சபைகள் தமது செயல்திறனை ஆண்டுதோறும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்களுக்குப் பொறுப் பான அமைச்சிடம் அறிக்கையிடுவதுடன் அவை அமைச்சினால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு அனைத்து மட்டங்களிலும் பொறுப் புணர்வைப் பிரதிபலிக்கும் வண்ணம் செயல்திறனுக்கேற்ப தர வரிசைப்படுத்தப்படுவதுடன் நாட்டின் மாநகரக் கழிவு முகாமைத்துவ நிலைப்பாடு பற்றி அனைத்துக் குடிமக்களும் ஏனைய பங்குதாரர் களும் அறியும் வகையில் பொதுப் பார்வைக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

ற) சிறந்த நடைமுறைகளைக் கவர்ச்சிகரமான சலுகைகளுடன் ஊக்கு விப்பதற்காக அங்கீகாரம் மற்றும் வெகுமதியளிக்கும் முறைமைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

ய) தடைகளின்றிச் சமூகத்திற்கு விளைதிறனாகவும் வினைத்திறனாகவும் சேவைகளை வழங்குவதை நிச்சயப்படுத்த உள்ளூர் அதிகார சபைகள் மூலம் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு நடை முறைகளைப் பின்பற்றி ஒரு சுகாதாரமான ஊழியர் படையணி யொன்றினைப் பராமரித்தல் வேண்டும்.

ர) ஊழியர் படையணி உள்ளிட்ட அனைத்துக் கழிவு முகாமை யாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோருக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு மற்றும் மாகாண சபைகளால் தவணை முறைத் திறன் விருத்தி மற்றும் பயிற்சி என்பவற்றினைக் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

வ) குடிமக்களின் தளங்களூடாகத் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார மட்டத்திலான மாநகரக் கழிவு முகாமைத்துவத்தின் ஒட்டு மொத்தச் சுயாதீன ஆண்டுதோறுமான மீளாய்வு ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

ன) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வழிகாட்டல் மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பின் கீழ் தற்போதுள்ள கட்டுப்பாடற்ற குப்பைமேடு களுக்காகக் கால இலக்குகளுடன் கூடிய பொருத்தமான புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் உள்ளூர் அதிகார சபைகளினால் உருவாக்கப்பட வேண்டும்.

## 2. பொதியிடல் கழிவு

அ) பொதியிடல் தொடர்பான தர நிலைகள் மற்றும் அவற்றினால் ஏற்படக் கூடிய சுற்றாடல் மற்றும் சுகாதார இடர்களின் பரந்த விளம்பரங் கள் மூலம் பாதுகாப்பு, சுத்தம் மற்றும் பொதியிடப்பட்ட உற்பத்தி யின் ஏற்புக்கான கட்டாயத் தேவைகளுக்கு மட்டும் பாவனையை மட்டுப்படுத்துவதன் மூலம் பொதிகளின் உருவாக்கத்தைக் குறைப் பதற்கான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஆ) பொதியிடலானது அதன் மீள்பயன்பாடு, மீட்பு மற்றும் மீள்சுழற்சி ஆகியவற்றிற்கு இடமளிக்கும் வகையிலும் சுத்திகரிப்பு மற்றும் பயன் பாட்டின் பின்னரான இறுதியகற்றலின் பொழுதான அதன் சுற்றாடல் தாக்கங்களைக் குறைக்குமுகமாகவும் வடிவமைக்கப்பட, உற்பத்தி செய்யப்பட, வர்த்தக மயமாக்கப்பட வேண்டும்.

இ) வாழ்க்கை வட்டத்தை உள்ளடக்கும் வகையில் அதிகாரிகள் மற்றும் கைத்தொழில்களினால் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளுடன் கூடிய மீள்பயன்பாடு மற்றும் மீட்புக்கு விளைதிறனாக வசதியளிக்கும் வகையில் பயன்படுத்திய பொதிகளை மீளப்பெறல் அல்லது சேகரிப்பதனை ஊக்குவிப்பதற்காக விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பைப் (Extended Producer Resposibility) பயன்படுத்தி முறைமைகளை நிறுவவேண்டும்.

ஈ) உணவுத் தரப் பொதியிடலுக்கான தரவரிசைகளைப் பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

உ) உயிரிச் சிதைவுறும் பொதியிடல் கழிவு பௌதிக, இரசாயன, வெப்ப அல்லது உயிரியல் ரீதியான உக்கலுக்கு உள்ளாகக் கூடிய தன்மையானதாக அதாவது பெரும்பாலான நிறைவு செய்யப்பட்ட கூட்டெரு இறுதியில் காபனீரொக்சைட்டாக, உயிர்த்திணிவாக மற்றும் நீராக மாற்றமடையக்கூடியதாக இருக்க வேண்டும்.

ஊ) பிளாத்திக்கு மற்றும் உக்காத பொதியிடலுக்குப் பதிலாக எப்பொழுதும் எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் சுற்றாடல் நேயப் பொதியிடல் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

எ) பொதியிடல் கைத்தொழிலுக்கு வழிகாட்டுமுகமாகத் தேசிய ரீதியில் பொருத்தமான தரவரிசைகள் இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் (SLSI) உருவாக்கப்பட வேண்டும்.

### 3. கைத்தொழில் கழிவு

அ) சுற்றாடல் நேயமிக்க முறையில் (கைத்தொழில் ஒன்றியவாழ்வு) பொருள், ஆற்றல், நீர், மற்றும்/அல்லது பக்கவிளைவுகளின் விளை-திறனான பௌதிகப் பரிமாற்றத்துடன் தொடர்புடைய ஒப்பீட்டு அனுகூலத்திற்காகக் கூட்டு அணுகுமுறை ஒன்றினை மேற்கொள்வதற்குப் பாரம்பரியமாகப் பிரிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு வசதிகளை யேற்படுத்தப்பட வேண்டும்.

ஆ) கைத்தொழில் பேட்டைகளில் அல்லது பூங்காக்களில் கைத்தொழில் அலகுகளைக் கொத்தணிப்படுத்தலானது சிறந்த செயல்திறன் கண்காணிப்புடன் சாத்தியமான இடங்களிலெல்லாம் பொதுவான சுத்திகரிப்பு வசதிகளோடு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இ) ஏனைய வீட்டுக்குரிய கழிவுகளில் இருந்து கைத்தொழில் கழிவுகள் பிரித்துச் சேகரிக்கப்படுவதுடன் தீங்கு விளைவிக்கும் கழிவு ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்காக விசேட முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஈ) கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் என்பவற்றுக்கான கண்காணிப்பு மற்றும் பின்தொடரும் முறைமை உட்பட அனைத்துக் கழிவு கையாளுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான தகவலை ஆண்டுதோறும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவித்தல் அனைத்துக் கைத்தொழில்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

உ) விளைதிறனுள்ள தரவு முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளுடனான கழிவுப் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்களை விளைதிறனோடு அறிவிப்பதற்கும் அவற்றில் ஈடுபடுவதற்கும் கைத்தொழில்களுக்கான பயனர்-நேய முறைமை /முறைமைகள் கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.

ஊ) கைத்தொழில் செயல்முறைகளில் தீங்கு விளைவிக்கும் உள்ளடக் கங்களைக் குறைத்தல் மற்றும் ஒழுங்குமுறையான பதிவிடல் மற்றும் அறிக்கையிடல் முறைமையுடன் கூடிய சுற்றாடல் நேயமிக்க முறை யான சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் என்பவற்றினை உறுதிப்படுத் துவதற்கும் சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எ) சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து பெறப்படும் கசடு தீங்கு விளை விக்கும் கழிவாகக் கருதப்பட்டுத் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை அகற்றுவதற்குரிய வசதியில் அது அகற்றப்பட வேண்டும்.

ஏ) சேகரிப்பு, சேமித்தல், சுத்திகரிப்பு மற்றும் ஏனைய முகாமைத்துவ வசதிகளுக்காகப் பொருத்தமான நியாயமான இடவசதிகளை அளிப் பதற்கும் அவர்களாலேயே அல்லது ஏனைய சேவை வழங்குநர் களுடன் இணைந்து பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்படுவதை உறுதிப் படுத்துவதற்கும் கைத்தொழில் வலயம் மற்றும் பூங்கா உரிமை யாளர்கள் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஐ) மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் அனைத்துப் பங்குதாரர் களுடனான பங்களிப்புடன் கைத்தொழில் கழிவு முகாமைத்துவம் பற்றிய செயல்திறன் கண்காணிப்பிற்காகக் கைத்தொழில் அலுவல்கள் அமைச்சு பொறுப்புடையதாக இருப்பதுடன் சவால்களை இனங் கண்டு சுற்றாடல் நேயமிக்க கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவை யான வசதியை ஏற்படுத்த வேண்டும்.

ஒ) கைத்தொழில் அலுவல்கள் அமைச்சு கைத்தொழிற் கழிவு முகா மைத்துவத்தின் செயல்திறனை அறிக்கையிடவும் பின்னூட்டப் பொறி முறைகளோடு ஆண்டுதோறும் அதனை வெளியிடவும் வேண்டும்.

ஓ) கைத்தொழில் அலுவல்கள் அமைச்சு கைத்தொழில் கழிவு தொடர் பான தரவுத் தளங்களை உருவாக்கிப் பராமரிப்பதோடு ஆண்டு தோறும் அவற்றை வெளியிடவும் வேண்டும்.

## 4. கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு

அ) எந்தவொரு நபரும் வாகனப் போக்குவரத்து அல்லது பொதுமக்கள் அல்லது வடிகால்கள் ஆகியவற்றைத் தடுக்கும் விதத்தில் கட்டுமான மற்றும் இடிமானக் கழிவை அங்கும் இங்கும் போடுவதோ அல்லது வைக்கவோ கூடாது.

ஆ) கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவுகள் ஏனைய கழிவுகளில் இருந்து பிரித்துச் சேகரிக்கப்பட வேண்டும்.

இ) அரசாங்கம் பயன்படுத்தப்பட்ட பொருளின் மீள்பயன்பாட்டை அதிகரிக்கும் முகமாகச் சுற்றாடல் நேயமிக்க முறையில் அவற்றைச் சேமித்தல், செயல்முறைப்படுத்தல், மீள்பயன்பாடு மற்றும் மீள் சுழற்சிக்கான வசதிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளைப் பொருத்தமானவாறு பொதுமக்கள், தனியார் மற்றும் தனியார்-பொதுமக்கள் கூட்டாண்மைகளோடு நிறுவுவதற்கு வசதியேற்படுத்த வேண்டும்.

ஈ) கழிவை உருவாக்குபவர்கள் கட்டுமானம், இடிமானம் மற்றும் திருத்தியமைத்தல் வேலைகளுக்காக அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் உள்ளூர் அதிகார சபைகளுக்குத் தமது கழிவு முகாமைத்துவத் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உ) கழிவை உருவாக்குபவர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோர் எல்லாச் செயற்பாடுகளிலும் ஏற்படக்கூடிய சுற்றாடல் மற்றும் பாதுகாப்புச் சிக்கல்களைத் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும்.

ஊ) கழிவை உருவாக்குபவர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோர் தொடர்பான உள்ளூர் அதிகார சபையோடு தாமாக அல்லது யாதாயினும் பொறுப்பு வாய்ந்த முகவராண்மை ஊடாகக் கலந்தாலோசித்து அனைத்துக் கழிவுகளையும் அகற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தவேண்டும்.

எ) உள்ளூர் அதிகார சபைகள் ஒழுங்குமுறையான கால இடைவெளில் கேள்விக்கேற்ப கட்டுமான மற்றும் இடிமானக் கழிவுகளைச் சேகரிப்பதற்கும் அகற்றுவதற்குமான திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும்.

ஏ) கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது (CIDA) பொருள்/உற்பத்திகள் பரிமாறல் முறைமைகளுக்கு வசதியளிப்பதற்குக் கட்டுமான மற்றும் இடிமானப் பொருள்/உற்பத்திகளுக்கான வழிகாட்டுதல்கள், நடைமுறைக்கான நெறிகள் மற்றும் தரவரிசை ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

ஐ) மத்திய சுற்றாடல் அதிகார சபையானது கட்டுமான மற்றும் இடிமானக் கழிவுகளின் சுற்றாடல் நேய முகாமைத்துவம் தொடர்பான வழிகாட்டுதல்களை உருவாக்கவேண்டும்.

## 5. சுகாதாரசேவைக் கழிவு

அ) கழிவு முகாமைத்துவச் செலவுகளைக் குறைக்குமுகமாகவும் வளப் பயன்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துமுகமாகவும் தீங்கு விளைவிக்கும் மற்றும் தீங்கு விளைவிக்காத கழிவுகள் வெவ்வேறாகச் சேகரிக்கப்பட, சுத்திகரிக்கப்பட மற்றும் அகற்றப்பட வேண்டும்.

ஆ) பொருத்தமானவாறு வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார சேவை வசதிகளைக் கொத்தணிப்படுத்துவதன் மூலமும் முறையான சேகரிப்பு வலையமைப்புகளை நிறுவுவதன் மூலமும் நாட்டிலுள்ள அனைத்துச் சுகாதார சேவைக் கழிவுகளையும் சுத்திகரிப்பதற்குத் தற்போதுள்ள கழிவுச் சுத்திகரிப்பு வசதிகளின் கிடைப்பனவுள்ள கொள்திறனானது அவற்றின் உயரிய அளவுவரை பயன்படுத்தப்பட வேண்டும்.

இ) தரவரிசைகளுக்கமைவாக உறுதிப்படுத்தப்பட்ட பரிசோதனைகளைக் கொண்டு ஆவியினால் தொற்று நீக்குதல் தொழில்நுட்பம் மூலம் சுத்திகரிக்கப்படும் கழிவானது, முறையான சுத்திகரிப்பின் பின்னர் தீங்கற்றதாக இருக்குமாகையால் அது செலவு விளைதிறனை அதிகரிக்கும் பொருட்டு இறுதியாக மாநகரக் கழிவுகளோடு அகற்றப் பட வேண்டும்.

ஈ) நாட்டின் அனைத்து அரச மற்றும் தனியார் சுகாதார சேவை நிறுவ னங்கள்/ வசதிகள் தமது தொழிற்பாட்டு அளவினைக் கருத்திற் கொள்ளாது மருத்துவக் கழிவுகள் தொடர்பாகச் சிறப்பாக வலியுறுத்தி உரிய அதிகார சபைகளுக்குச் செயல்திறனைக் கண் காணிக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்தும் வகையில் முறையான பதிவிடல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளுடன் கழிவு முகாமைத்துவத்திற்கான திட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்த வேண்டும்.

உ) புற்றுநோய்ச் சிகிச்சையிலிருந்து உருவாகும் கழிவுகள் மற்றும் காலா வதியான மருந்துகளின் கையாளுகை, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் என்பவற்றிற்குச் சிறப்பான முற்காப்பு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊ) உருவாக்கப்படும் கழிவுகளின் அளவைப் பொறுத்துச் சுகாதார நிறுவனங்களினால் பொருத்தமான சுற்றாடல்-நேய மற்றும் பொருளா தார ரீதியாகச் சாத்தியமான தொழில்நுட்பங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

எ) சுகாதார அமைச்சினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஒழுங்குவிதிகளுக்கமைய நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் சுகா தார சேவை நிறுவனங்கள்/வசதிகளுக்குத் திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவு முகாமைத்துவம் உள்ளடங்கலாக அனைத்து வகைச் சுகாதார சேவைக் கழிவுகள் தொடர்பாகவும் தெளிவான மற்றும் பயனர்-நேய வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

ஏ) மருத்துவக் கழிவுகள் முறையற்ற வகையில் அகற்றப்படுவதையும் ஏனைய கழிவுப் பாய்வுகளுடன் கலப்பதையும் தடுப்பதற்கு நாடெங் கிலும் கழிவுச் சேகரிப்பு வலையமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஐ) கழிவு சேகரிப்பவர்களும் அகற்றுபவர்களும் உள்ளூர் அதிகார சபை களுக்கு மேலதிகமாகச் சுகாதார அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றிலும் பதிவுசெய்யப்பட வேண்டும்.

ஒ) தொற்றக்கூடிய மற்றும் வேறு சுகாதாரம் தொடர்பான தொகையான கழிவுகள் சுற்றாடல் நேய முறையில் சுத்திகரிக்கப்படவும் அகற்றப் படவும் வேண்டும்.

ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள சுற்றாடல் தரவரிசைகளுக்கு ஏற்ப சுகாதார நிறுவனங்கள் சுகாதார சேவைக் கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதி-களை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும்.

## 6. மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவுகள் (e-waste)

அ) மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவின் உள்ளார்ந்த தீங்கு விளைவிக்கும் பண்புகளைக் கருத்தில் கொண்டு மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் நாட்டின் ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் பகுதியாகக் கருதப்பட வேண்டும்.

ஆ) மின்னியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்திகளின் தவறான முகாமைத்துவத்தின் சாத்தியமான சுற்றாடல் தாக்கங்களை ஒருங்கிணைத்து மின்னியல் மற்றும் இலத்திரனியல்சார் கல்வி யறிவை ஊக்குவிப்பதற்கான அளவுசார் மற்றும் பண்புசார் இலக்குகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இ) மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு உருவாக்கத்தைத் தடுப் பதற்கும் குறைப்பதற்கும் பயன்படுத்தத்தக்க, பயன்படுத்தப்பட்ட (ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட) மின்னியல் மற்றும் இலத்திரனியல் கருவிகளின் இறக்குமதி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

ஈ) பரிசுகள், நன்கொடைகள் மற்றும் வேறு ஏதேனும் வழிகள் மூலம் இலங்கையை வந்தடைகின்ற காலங்கடந்த/பயன்படுத்தப்பட்ட உற்பத்தி களைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

உ) பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புத் துறையில் ஈடுபட்டுள்ள முறை சாராத் துறையின் திறன்களை முறைப்படுத்துவதற்கும் தரமுயர்த்து வதற்குமான ஒரு பொறிமுறை நிறுவப்படவேண்டும்.

ஊ) இலத்திரனியல் கழிவின் முறையற்ற அகற்றுதல் மற்றும் ஏனைய கழிவுப்பாய்வுகளுடன் கலத்தல் ஆகியவற்றைத் தடுக்கும் வகையில் நாடெங்கிலும் மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்பு வலையமைப்புகள் நிறுவப்பட வேண்டும்.

எ) மீள்சுழற்சிக்குட்படுத்தமுடியாத மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை அகற்றுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

ஏ) வாழ்க்கை வட்ட முகாமைத்துவத்தை உள்ளடக்கி மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபை மட்டங்களில் வினைத்திறன்மிக்க மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ முறை மைகளை உறுதி செய்வதற்கு வள ஒன்றுதிரட்டல் உத்திகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஐ) காலாவதியான மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்களின் இறுதி அகற்றலுக்கு இறக்குமதியாளர்/ உற்பத்தியாளர்/ முகவர் ஆகியோர் பொறுப்பானவர்கள் ஆக்கப்பட வேண்டும்.

## 7. கதிரியக்கக் (திண்ம) கழிவு

அ) திண்மக் கதிரியக்கக் கழிவானது அனைத்து உருவாக்குபவர்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியோரின் ஒத்துழைப் புடன் அணுசக்தி சபை மற்றும் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ஆகியவற்றினால் முகாமை செய்யப்பட வேண்டும்.

ஆ) செயல்திறன் கண்காணித்தலுக்காகப் பதிவுசெய்தல் மற்றும் அறிக்கை யிடல் முறைமைகளைக் கொண்டு கதிரியக்கக் கழிவுகளின் உருவாக்கமூலம், கொண்டுசெல்லல், சேமிப்பு மற்றும் அகற்றுதல் ஆகியவற்றினை இனங்காண்பதற்கான முறையான முகாமைத்துவத் திட்டங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

## 8. கடல்சார் கழிவு

அ) சர்வதேசக் கடல்சார் அமைப்பு மற்றும் ஏனைய தொடர்புடைய உரிமை நியமிக்கின்ற சமவாயங்கள் மற்றும் அவற்றின் நடை முறைக்கான பொறுப்பு என்பவற்றுடன் இணங்கிக் கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, கரையோ ரப் பாதுகாப்புத் திணைக்களம், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு என்பவற்றினால் கடல்சார் கழிவு, கப்பல்களினால் உரு வாக்கப்படும் கழிவுகள் மற்றும் மீன்பிடித் துறை முகங்கள் உள்ள டங்கலாக ஆனால் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாத கடல் தொடர்பான கழிவுக்கான ஒரு விரிவான செயல் திட்டம் உருவாக் கப்பட வேண்டும்.

ஆ) உரிய முன்னணி நிறுவனங்கள் தவணை முறையில் கடல்சார் கழிவு முகாமைத்துவத்தின் செயல்திறனைக் கண்காணித்துப் பதிவு செய்வதோடு, ஆண்டுதோறும் அதனைச் சுற்றாடல் அமைச்சுக்கு அறிக்கையிடுவதுடன் சுற்றாடல் அமைச்சு ஒட்டுமொத்தச் செயல் திறனை மீளாய்வு செய்து ஆண்டுதோறும் அதனை வெளியிட வேண்டும்.

## 9. உணவு, விவசாயம் மற்றும் கால்நடைக் கழிவு

அ) இறுதியாக அகற்றப்பட வேண்டிய உணவு, விவசாயம் மற்றும் கால் நடைக் கழிவுகளின் அளவைக் குறைக்குமுகமாகத் தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்போடு விவசாய, வர்த்தக, சுற்றுலாத் துறை, உள்ளூராட்சி, சுகாதார மற்றும் கல்வி ஆகிய அமைச்சு களினால் விரிவான உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆ) உரிய முன்னோடி முகவராண்மைகள் தவணைமுறையில் கழிவு முகா மைத்துவத்தின் செயல்திறனைக் கண்காணித்துப் பதிவு செய்வ தோடு, ஆண்டுதோறும் சுற்றாடல் அமைச்சுக்கு அறிக்கையிடுவ துடன் சுற்றாடல் அமைச்சு ஒட்டுமொத்த செயல்திறனை மீளாய்வு செய்து ஆண்டுதோறும் அதனை வெளியிட வேண்டும்.

### 8.2.2 திரவக்கழிவு

1. **பொது (திரவக்கழிவுகளின் அனைத்து வகைகளையும் உள்ளடக்குகின்றது)**

வீடுகள், வணிக நிலையங்கள், தங்கும் இடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கைத்தொழிற்சாலை சுகாதாரம், விவசாயம், கால்நடை, வாகனச் சேவை நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை, காணி நிரப்புகைத் தளங்கள், ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் போன்ற வெவ்வேறு பிரிவுகளின் கழிவு நீர் உருவாக் கத்தை மதிப்பீடு செய்வதற்காகவும் தடுக்கும் உத்திகளை ஊக்கு வித்தல் மற்றும் கழிவு நீரின் முறையான சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைகள் சுற்றாடல் நேய முறையில் நிகழ்த்தப்படுவதை உறுதிப் படுத்தல் என்பவற்றிற்காகவும் தேசிய அடிப்படைக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2. **சாக்கடை**

அ) சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைத் தடுப்பதற்கு வீடுகள் உள்ளிட்ட சாக்கடைக் கழிவு நீரை உருவாக்குகின்ற அனைவரும் தொடர்புடைய உள்ளூர் அதிகார சபைகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, சுகாதார மருத்துவ அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்/ சுகாதார அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களின் ஆலோசனைக்கமைவாகச் சாக்கடைக் கழிவுநீர் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஆ) உள்ளூர் அதிகார சபைகள்/ சுகாதார மருத்துவ அதிகாரிகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்/ சுகாதார அமைச்சு என்பன சமூகத்திற்குப் போதுமான கழிப்பறை வசதிகளை உறுதி செய்வதற்கும் சாக்கடைக் கழிவு நீரினால் நிலம் மற்றும் நீர் ஆகியன தொற்றுக்குள்ளாவதைத் தடுப்பதற்கும் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

இ) நீர்நிலைகள், நிலம் மற்றும் ஏனைய உணர்திறன் மிக்க சூழல் தொகுதிகளின் மாசடைதல் பொதுச் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்குத் தேசிய நீர்வழங் கல் வடிகாலமைப்புச் சபையின் ஒத்துழைப்போடு மத்திய சுற் றாடல் அதிகார சபையினால் சாக்கடைக் கழிவுநீர் வெளிப் பாய்வு அகற்றல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ வழிகாட்டு தல்களுக்கான தரவரிசைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஈ) சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து உருவாக்கப்படும் கசடு இறுதி யில் சுற்றாடல் நேயமிக்க முறையில் அகற்றப்பட வேண்டும்.

## 3. கைத்தொழில் கழிவுகள், இரசாயனக் கழிவுகள் திரவக்கசிவு மற்றும் சேவை நிலைய வெளிப்பாய்வு

அ) கழிவை உருவாக்குபவர்கள் அனைவரும் தொடர்பான அதிகார சபைகளுடன் கலந்தாலோசித்து ஆண்டுதோறுமான செயல் திறனைக் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் பொறிமுறை களைக் கொண்டு தமது சொந்த முகாமைத்துவத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக் கப்பட வேண்டும்.

ஆ) சாத்தியமான இடங்களிலெல்லாம் தளத்திலான அல்லது தளத் திற்கு வெளியேயான பொதுவான சுத்திகரிப்பு வசதிகள் ஊக்கு விக்கப்பட வேண்டிய அதேவேளை பொதுவான சுத்திகரிப்பு வசதி கள் சாத்தியமாகாத போது தளத்திலான சுத்திகரிப்பு வசதிகள் கட்டாயமாகும்.

இ) தீங்கு விளைவிக்கும் திரவ இரசாயனக் கழிவுகளின் வழங்குநர் மற்றும் வழங்கல் சங்கிலி என்பனவற்றின் ஊடாக இரசாயனச் சகிப்பு எல்லை முகாமைத்துவத்துக்கான பொருத்தமான பொறி முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

## 4. பெற்றோலிய எச்சங்கள், சுகாதார சேவை வெளிப்பாய்வு, விவ சாய இரசாயனங்கள் மற்றும் ஏனைய அதிகரித்துவரும் மாசாக்கிகள் என்பவற்றால் வெள்ள நீரோட்டத்தில் ஏற்படும் தொற்று

அ) கழிவை உருவாக்குபவர்கள் அனைவரும் தொடர்பான அதிகார சபைகளுடன் கலந்தாலோசித்து வெள்ள நீரோட்டத் தொற்றைத் தடுப்பதற்குப் பொருத்தமான ஆண்டுதோறுமான செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளைக் கொண்டு தமது சொந்த முகாமைத்துவத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஆ) தீங்கு விளைவிக்கும் இரசாயனக் கழிவுகளின் வழங்குநர் மற்றும் வழங்கல் சங்கிலி என்பனவற்றின் ஊடாக இரசாயனச் சகிப்பு எல்லை முகாமைத்துவத்துக்கான பொருத்தமான பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

இ) முன்னணி நிறுவனங்களும் முகவராண்மைகளும் உணர்திறன் மிக்க சூழல்தொகுதிகள் மற்றும் அவ்விடத்திலேயே உருவாக் கப்பட்டிருக்காத கழிவு உள்ளடக்கங்களைக் கொண்ட பகுதிகள் ஆகியவற்றின் தொற்றினைத் தடுப்பதற்குக் கழிவு உருவாக்கப் படும் புள்ளிகளில் சுற்றாடல் நேயக் கழிவு முகாமைத்துவத் துக்கான திட்டங்களை விருத்தி செய்வதற்குப் பொறுப்பாக்கப் படுதல் வேண்டும்.

## 5. உணவைக் கையாளும் நிறுவனங்கள் மற்றும் சமையலறைக் கழிவுகள் (அசுத்த நீர்)

அ) கழிவை உருவாக்குபவர்கள் அனைவரும் தொடர்பான அதிகார சபைகளுடன் கலந்தாலோசித்துச் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைத் தடுப்பதற்குத் தமது சொந்த முகாமைத்துவத் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஆ) நீர் நிலைகள் மற்றும் நிலம் ஆகியன தொற்றுக்குள்ளாகிச் சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்குப் பொருத்தமானவாறு தரவரிசைகளுடன் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிக் கழிவு குறைத்தலை முன்னுரிமைப் படுத்தி உணவு மற்றும் விவசாயக் கழிவுகளுக்கான வழிகாட்டு தல்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

## 6. திரவக் கதிரியக்கக் கழிவு

அ) திரவக் கதிரியக்கக் கழிவானது அனைத்து உருவாக்குபவர் கள், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அணுசக்தி சபை மற்றும் அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை ஆகியவற்றினால் முகாமை செய்யப்பட வேண்டும்.

ஆ) ஆண்டுதோறுமான கழிவு முகாமைத்துவத்தின் செயல்திறனுக்கான பதிவுசெய்தல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளைக் கொண்டு திரவக் கதிரியக்கக் கழிவுகளின் உருவாக்கமூலம், கொண்டுசெல்லல், சேமிப்பு மற்றும் அகற்றுதல் ஆகிய வற்றினை இனங்காண்பதற்கான வழிகாட்டல்களுடன் கூடிய முறையான முகாமைத்துவத் திட்டங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

இ) வெவ்வேறு மூலங்களிலிருந்தான நிலம் மற்றும் நீர் மாசடைதலுடன் தொடர்புடைய இடர்கள் இனங்காணப்படுவதுடன் மாசடைதலைத் தடுப்பதற்காகத் தவணை முறையில் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

### 8.2.3 வாயுக்கழிவுகள்

அ) ஆண்டுதோறுமான செயல்திறன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் முறைமைகளுடன் கழிவை உருவாக்குபவர் அனைவரும் கைத்தொழில், வாகனம், கப்பல், கடல் மற்றும் மீன்பிடி, எரியூட்டற் கருவி, காணி நிரப்புகை, கழிவுநீர்த் தாங்கிகள் மற்றும் ஏனைய சாக்கடைக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கித் "தூய காற்று 2016/2025" செயல் திட்டத்திற்கமையத் தமது சொந்த உத்திகளையும் செயல் திட்டங்களையும் விருத்தி செய்வதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

ஆ) சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளைத் தடுப்பதற்குத் திறந்தவெளி எரித்தல் மற்றும் உட்புறக் காற்று மாசடைதல் தடுக்கப்படுவதுடன் / அல்லது குறைக்கப்பட வேண்டும்.

இ) எல்லை கடந்த வாயு மாசடைதலுக்குத் தீர்வுகாணும் வகையில் பிராந்திய ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகள் நிறுவப்பட வேண்டும்.

ஈ) இடர் தொடர்பான இடங்களிலும் கணிசமான வாயு உமிழ்வு மூலங்கள் தொடர்ச்சியாகக் காணப்படும் முக்கிய பகுதிகளிலும் சுற்றுப்புறக் காற்றின் தரத்தைப் பதிவதற்கும் அறிக்கையிடுவதற்குமான பொறிமுறைகள் நிறுவப்பட வேண்டும்.

உ) செயல் திட்டத்தில் பிரதிபலிக்கப்படாத மூலங்களை உள்ளடக்கி மேலதிக தகவல்களோடு "தூய காற்று 2016/2025" செயல் திட்டத்தின் அமுலாக்கலின் ஒட்டுமொத்த ஆண்டுதோறுமான செயல் திறனைச் சுற்றாடல் அமைச்சானது பதிவு செய்து அறிக்கையிட வேண்டும்.

ஊ) சுற்றுப்புறக் காற்றுத் தரமட்டங்களைக் கருத்திற் கொண்டு அசையும் மற்றும் நிலையான மூலங்கள் அடங்கலாகக் கைத்தொழில் வாயு உமிழ்வுகளிலிருந்து உருவாகும் வாயுக் கழிவுகளின் வெளியேற்றத்திற்கான தர வரிசைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விருத்தி செய்யப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

எ) வாயு மாசாக்களின் உமிழ்வினைக் குறைக்கும் தொழில்நுட்பங்களைக் கையாள்வதற்குக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கான நிதியியல் பொறிமுறைகள் நிறுவப்பட வேண்டும்.

ஏ) நாட்டில் ஒரு சுகாதாரமான சுற்றுப்புறக் காற்றுத் தரம் பேணப் படுவதை உறுதிப்படுத்துமுகமாகக் கைத்தொழில் மூலங்களி லிருந்து உருவாகும் வாயு உமிழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற் கான உரிமம் வழங்குதல்/ ஒதுக்கீட்டு முறை ஒன்றை அறிமுகப் படுத்துவதற்கான சாத்தியத்தை மதிப்பிடுவதற்கான பொறிமுறை கள் நிறுவப்பட வேண்டும்.

ஐ) கைத்தொழில் வாயுக் கழிவுக்கான இடர் மதிப்பீட்டுத் திட்டங் களும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அபாயச் சுட்டிகளுடன் விருத்தி செய்யப்பட்டு முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகள் மற்றும் பேரிடர் குறைப்பு ஆகியவை தவணைமுறையில் சரிபார்க்கப் படவும் அமுலாக்கப்படவும் வேண்டும்.

## *8.3 அறிவு முகாமைத்துவம் மற்றும் திறனைக் கட்டியெழுப்புதல் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

### 8.3.1 கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

அ) உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு தொடர்பான வாழ்க்கை வட்டப் பிரச்சினைகள் மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு, உணவுக் கழிவு மற்றும் பொதியிடலிலிருந்து உருவாகும் கழிவு ஆகியவற்றின் மீதான விசேட வலியுறுத்தலுடனான செயல்முறை வகுப்புகளுடன் ஆரம்ப மட்டத்திலிருந்து உயர் மட்டங்கள் வரை பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஆ) உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு தொடர்பான வாழ்க்கை வட்டப் பிரச்சினைகள் நாடு முழுவதும் விளைதிறனான முகாமைத் துவத்துக்கான போதுமான அறிவுடைய மனித மூலதனம் இருப் பதை உறுதிப்படுத்துமுகமாகச் சுற்றாடல், பொருளாதார மற்றும் சமூக அம்சங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிப் பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்விக் கலைத்திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இ) கழிவு முகாமைத்துவம் தொடர்பான பல்வேறுபட்ட ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட பிரச்சினைகள் மற்றும் உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாததனால் ஏற்படும் தொடர்புபட்ட சமூகச் செலவுகள் பற்றித் தவணை முறையில் அனைத்துக் குடிமக்கள் மற்றும் நிறுவனங்களின் பொதுக் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பொறி முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஈ) ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட கழிவு முகாமைத்துவப் பிரச்சினை கள் மற்றும் பேரிடர்களைத் தடுப்பதற்கு உரிய காலத்தில் நட வடிக்கை எடுக்காமையினால் ஏற்படக்கூடிய சாத்தியமான இடர் கள் ஆகியன தொடர்பாக அனைத்து வகையான கொள்கை

வகுப்பாளர்களும் அவ்வப்போது அறியச் செய்வதற்கான வலுவான பொறிமுறைகள் நிறுவப்படவேண்டும்.

உ) கழிவு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களிலும் வெவ்வேறு இலக்குக் குழுக்களுக்கான பல கல்வி மற்றும் விழிப் புணர்வு நிகழ்ச்சிகளை அவ்வப்போது சேர்த்துக் கொள்வதற்கு ஊடகங்கள் ஊக்குவிக்கப்படவும் வழிகாட்டப்படவும் வேண்டும்.

### *8.3.2 திறன்கள் விருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி*

அ) ஆரம்ப கட்டமாகத் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் மட்டங்களில் மிக உயர்ந்தளவு பொறுப்பு, பொறுப் புணர்வு மற்றும் ஒத்துழைப்புடன் வினைத்திறன் மிக்கதும் விளை-திறன் மிக்கதுமான கழிவு முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் முகமாக மாநகரக் கழிவு மீதான சிறப்பு வலியுறுத்தலோடுகூடிய கழிவு முகாமைத்துவத்தின் அனைத்துத் தொடர்புபட்ட அம்சங் களையும் உள்ளடக்கி ஒரு இலக்குக் குறித்த, அர்ப்பணிக்கப் பட்ட திறன்விருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது செலவுச் சிக்கனமான முறையில் திறமையான துறைசார் நிபுணர்களுடன் நிறுவப்பட வேண்டும். இந் நிலைய மானது நாடு முழுவதும் கழிவு முகாமைத்துவத்திற்கான தேவை ஏற்படுமாயின் அர்ப்பணிக்கப்பட்ட தேசிய கழிவு முகாமைத்துவ அதிகார சபையாகப் பரிணமிக்கலாம்.

ஆ) புத்தாக்கத்தையும் மிகச் சிறந்த செயல்முறைகளையும் ஊக்கு விப்பதற்கும் இனங்காண்பதற்கும் இம் முன்மொழியப்பட்ட நிறுவ னத்தினால் முழுக் கழிவு முகாமைத்துவ வட்டத்தினதும் சுற்றாடல், பொருளாதார மற்றும் சமூக அம்சங்கள் தொடர்புபட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கட்டாயமாக்கப்பட வேண்டும்.

இ) கழிவு, புத்தாக்கங்கள், புத்தாக்குநர்கள், உற்பத்தி மற்றும் செயல் முறை அபிவிருத்தி/ திருத்தங்கள் ஆகியவற்றின் மீதான ஆய்வுகளுக்கு மாசுபடுத்துபவர் செலுத்துவார் கோட்பாட்டு அடிப்படையிலான வரிகள் மற்றும் அறவீடுகள் ஆகியவற்றிலிருந் தான நிதியளிப்புகளைக் கொண்டு ஓர் ஆராய்ச்சி நிதியம் நிறுவப்பட வேண்டும்.

ஈ) தொடர்பான முன்னோடி நிறுவனங்களினால் கழிவு முகாமை யாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பொருத்தமானதாகத் தேசிய தொழிற் தகைமை (NVQ) கட்டாயப்படுத்தப்படல் வேண்டும்.

உ) கழிவு முகாமைத்துவத்தில் நிலவும் இயற்கையான மூலதனக் குறைபாட்டு இடைவெளிகளை ஈடுசெய்வதன் மூலம் தவணை முறைத் திறன்கள் விருத்தி மற்றும் பயிற்சியை வழங்குவதற்குத் தேசிய தொழில் தகைமை முறைமை வலுவூட்டப்பட வேண்டும்.

ஊ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மட்டத்தில் கழிவு முகாமைத்துவ கொள்கையினை விளைதிறனோடு நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு பொருத்தமான பொறிமுறை ஒன்றினை நிறுவுதல் வேண்டும்.

### 8.3.3 தொழில்நுட்ப அபிவிருத்தி, பயன்பாடு மற்றும் இடமாற்றம்.

அ) இலங்கை கைச்சாத்திட்டுள்ள பல்தரப்பு சுற்றாடல் ஒப்பந்தங்களின் அமுலாக்கத்தில் தேசிய கடப்பாடுகளை நிறைவேற்றுமுகமாக அனைத்துப் பங்குதாரர்களினதும் ஒத்துழைப்புடன் சுற்றாடல் அமைச்சும் ஏனைய தொடர்புபட்ட தேசிய மைய நிறுவனங்களும் தொழில்நுட்பத் தேவைகளை இனங்காண்பதற்கான அறிவைப் புகட்டவேண்டும்.

ஆ) மாசடைதல் ஒரு மூலத்திலிருந்து இன்னொரு மூலத்திற்குப் பரவிச் செல்வதைத் தடுப்பதற்கும் வளப் பயன்பாட்டை உச்சமாக்குவதற்கும் கழிவு வகைகளுக்கிடையிலான இடையிணைப்புகளைக் கருத்திற்கொண்டு பிரத்தியேகமாக முழுமையான ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவ முறைமைகள் மீது தொழில்நுட்ப அபிவிருத்திப் பயன்பாடு மற்றும் இடமாற்றம் ஆகியன கவனம் செலுத்தவேண்டும்.

இ) கழிவு மீள்சுழற்சி மற்றும் வள மீட்சி ஆகியவற்றுக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி முழு வாழ்க்கை வட்டத்தையும் உள்ளடக்கிப் பொருத்தமான கூட்டாண்மையோடு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஈ) பொருத்தமான, செலவு குறைந்த, மலிவான கழிவுச் சுத்திகரிப்பு வசதிகளின் அபிவிருத்தி ஊக்குவிக்கப்படுவதுடன் அவை கழிவு முகாமையாளர்களுக்குப் பெற்றுத் தரப்படவேண்டும்.

உ) நாட்டின் கடப்பாடுகளை நிறைவேற்றுமுகமாகச் சுற்றாடல் அமைச்சும் ஏனைய தொடர்புபட்ட தேசிய மைய நிறுவனங்களும் ஏனைய முன்னோடி நிறுவனங்களின் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஊ) முயற்சியாண்மை மற்றும் முகவாண்மைகள் என்பவற்றுக்காகத் தொழில்நுட்ப அபிவிருத்தி, பயன்பாடு மற்றும் இடமாற்றம் என்பவற்றுக்கு உதவும் வகையில் அந் நிறுவனங்களின் திறன் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு பேண்தகு நிதிப் பொறிமுறை நிறுவப்பட வேண்டும்.

எ) தொடர்புள்ள புத்தாக்கங்கள் அங்கீகரிக்கப்பட, ஊக்குவிக்கப்பட மற்றும் அவ்வப்போது அவற்றின் திறன்கள் ஒழுங்கான செயல் திறன் கண்காணிப்பு, பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடலின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற சேவை/ சேவைகளை வழங்கு கின்றனவா என்று சரிபார்க்கப்படுவதற்காகப் பின்தொடரப்பட வேண்டும்.

ஏ) பாரம்பரிய கைத்தொழிற்சாலைகள் அவற்றின் தொழில்நுட்பம், தொழில்நுட்பத் திறன் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றைத் தரமுயர்த்துவதன் மூலம் கழிவைக் குறைத்தல், கையாள்தல், சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல் என்பவற்றுக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

### 8.3.4 உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

அ) கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் வசதிகள் முழு நாட்டை யும் உள்ளடக்கும் வண்ணம் சுற்றாடல் நேய முறையில் மையப் புள்ளிகளில் நிறுவப்பட வேண்டும்.

ஆ) கைத்தொழில் மற்றும் சுகாதார சேவைக் கழிவு முகாமைத்துவத் துக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நிரல் அமைச்சு களின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்; மத்திய சுற்றாடல் அபி விருத்தி அதிகார சபையினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாகத் தீங்கு விளைவிக்கும் கழிவுகளுக்கான சிறப்பு முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

இ) மாசுபடுத்துபவர் செலுத்துவார் என்ற கோட்பாட்டையும் விரிவாக் கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு என்ற கோட்பாட்டையும் பிரயோகிப்பதற்குப் பொருத்தமான கருவிகளை விருத்தி செய்தல் சேர்த்துக்கொள்ளுதல் மூலம் மத்திய சுற்றாடல் அதிகார சபை மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ உட்கட்டமைப்பு வசதிகளுக்கு வழிகாட்டவும் வசதி ஏற்படுத்தவும் வேண்டும்.

ஈ) பொருத்தமாகத் தனியார் மற்றும் பொதுத்-தனியார் கூட்டாண்மை களோடு உயரிய பொறுப்பும் மற்றும் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காகப் பொறுப்புக்கூறலும் கொண்ட உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக மாநகரக் கழிவு முகாமைத்துவத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கு வதற்கு ஒரு அர்ப்பணிப்புமிக்கதும் பேண்தகைமையுள்ளதுமான நிறுவனப் பொறிமுறை விருத்தி செய்யப்பட வேண்டும்.

உ) மீள்சுழற்சி / மீட்பு முறைமைகளைப் பொருளாதார ரீதியாக உறுதியானதாக்குவதற்கு விரிவான நாடு தழுவிய சேமிப்பு, சேகரிப்பு மற்றும் கொண்டுசெல்லல் முறைமைகள் நிறுவப்பட வேண்டும்.

ஊ) கண்காணித்தல் மற்றும் ஆண்டுதோறுமான செயல்திறன் அறிக்கையிடல் முறைமைகளைக் கொண்டு சுற்றாடல் நேய முறையில் மீள்சுழற்சி, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமைகள் ஆகியவற்றை நிறுவுவதற்கான தனியார், பொது மற்றும் தனியார்-பொதுக் கூட்டாண்மைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

எ) நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் அகற்றலுக்கான அமைவிடங்கள் ஒரு நாடளாவிய அடிப்படையில் இனங்காணப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதோடு சுற்றாடலுக்கும் தொடர்புபட்ட சூழல்தொகுதிகளுக்குமான பாதகமான தாக்கங்களைத் தடுப்பதற்குச் சட்டத்தின் தேவைக் கேற்ப தேவையான அனுமதிகள் தொடக்கநிலைச் சுற்றாடல் பரிசோதனை மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஏ) வளப் பயன்பாட்டின் வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்துவதற்கும் மாசடைதலைக் குறைப்பதற்கும் மற்றும் இணக்கச் செலவைக் குறைப்பதற்கும் திரவ மற்றும் திண்மக் கழிவுகளுக்கான பொதுச் சுத்திகரிப்பு வசதிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஐ) மாகாண சபைகளும் தேசிய அரசாங்கமும் அனைத்து உள்ளூர் அதிகார சபைகளையும் உள்ளடக்கிக் கொத்தணி அடிப்படையிலான அகற்றல் வசதிகளை விருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு ஒதுக்கீடு வழங்க, வழி காட்ட மற்றும் உதவவேண்டும்.

ஒ) இணக்கத்துடனான பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளையும் தர வரிசைகளையும் ஒதுக்குவதன் மூலம் உட் கட்டமைப்பு அபிவிருத்தியில் தேர்ச்சி மிக்க, அனுபவம் மிக்க, திறமையான தொழில்வாண்மையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஓ) நாட்டில் முறையற்ற வகையில் கழிவு அகற்றப்படுதலையும் சட்ட விரோதமாகக் குப்பை கொட்டப்படுவதையும் தடுக்குமுகமாக எண்ணிமத் தொழில்நுட்பத்தை அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கழிவுக் கண்காணித்தல் முறைமைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

ஔ) பொருள் சமநிலைக்கான முறையான அறிக்கை பேணல் மற்றும் ஆண்டுதோறுமான வெளியீடு என்பன உட்கட்டமைப்பு வசதிகளின் உரிமையாளர்களுக்குக் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

க) கழிவு முகாமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர் ஆகியோரின் உயரிய பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமுகமாகப் பொருத்த மான தண்டனை உட்கூறுகளோடு உட்கட்டமைப்பு வசதிகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நிபந்தனைகளின் மீறல் இடர் களைத் தவிர்ப்பதற்கு மாதிரி ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

### 8.3.5 ஏனைய ஆதரவுக் கொள்கைகள் மற்றும் தேசிய செயல் திட்டங்களுடனான ஒருங்கிணைப்பு

அ) செயல்திறன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலோடு தேசியப் பசுமைக் கொள்முதல் கொள்கை மற்றும் பேண்தகு நுகர்வு மற்றும் உற்பத்திக் கொள்கை ஆகியவற்றை அமுல்படுத்து வதற்கான பொறிமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆ) விளைதிறன்மிக்க செயல்திறனை அடிப்படையாகக் கொண்ட மதிப் பீடுகள் மற்றும் வெளியீடுகளோடு தேசியப் பசுமை அறிக்கை யிடல் முறைமையின் அமுலாக்கத்தை வலுப்படுத்துவதற்காக பொறிமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

இ) ஏற்கனவே விருத்தி செய்யப்பட்ட தேசிய தூய்மை உற்பத்திக் கொள்கை மற்றும் துறைசார் தூய உற்பத்திக் கொள்கைகள் ஆகியவற்றைப் புதுப்பிப்பதற்கும் அமுல்படுத்துவதற்குமான பொறி முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஈ) ஒரு மூலத்திலிருந்து இன்னொரு மூலத்திற்கு மாசடைதல் மாறிச் செல்லுதலைத் தடுத்தல் மற்றும் வளப் பயன்பாட்டை உச்ச மாக்குதலுக்காகக் கழிவு வகைகளின் இடை-இணைப்புகளைக் கருத்தில் கொண்டு முழுமையான ஒருங்கிணைக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைமைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உ) ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள், காலநிலை மாற்றங்களைக் குறைத்தல் மற்றும் இயைபாக்க நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கழிவு மற்றும் இரசாயனங்கள் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கைகள் என்பவற்றை அமுல் படுத்தல் தொடர்பான தேசிய மட்டப் பொறுப்புகள் என்பன செயல்திறன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் என்பவற் றுடன் கூடிய கழிவு முகாமைத்துவ முறைமையினுள் விளைதிற னோடு ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

## *8.4 நிறுவனப் பொறிமுறைகள், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் ஆகியன தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

### 8.4.1 தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபை மட்டங்கள்

அ) கழிவு மற்றும் இரசாயனங்கள் தொடர்பாக இலங்கை கைச்சாத்திட்டுள்ள அனைத்து சர்வதேச உடன்படிக்கைகளின் தற்போதுள்ள தேசிய மட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறைகள் கழிவு முகாமைத்துவம் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிவு மற்றும் தகவல்களை மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் பரப்புமுகமாக வலுப்படுத்தப்படவும் விரிவுபடுத்தப்படவும் வேண்டும்.

ஆ) மாநகரக் கழிவுகளுக்காக இரண்டு தேசிய மட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறைகள் / குழுக்கள் நிறுவப்படும், அவை; (1) சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் இணைத்தலைமையின் கீழ் காலாண்டுக்கொருமுறை அத்துடன் /அல்லது ஒவ்வொரு ஆறு மாதமும் கூடுதல் (2) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் 09 மாகாண சபைகளோடும் மற்றும் ஏனைய தொடர்புள்ள பங்குதாரர்களோடும் மாதாந்தம் கூடுதல். பின்னையது மாகாண சபைகள் மற்றும் உள்ளூரதிகார சபைகளின் செயல் திட்டங்களுக்கு அமைவாக மாநகரக் கழிவு முகாமைத்துவத்தில் அவற்றிற்கு வசதியேற்படுத்தவும் வழிகாட்டவும் வேண்டியிருப்பதுடன் முன்னையது தேசியக் கொள்கைக்கமைவாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ப ஒட்டுமொத்தச் செயல்திறனை மதிப்பிட வேண்டும்.

இ) கழிவு முகாமைத்துவக் கொள்கையின் ஒட்டுமொத்தச் செயல்திறனை மதிப்பிடுவதற்காகச் சுற்றாடல் அமைச்சு தலைமை அங்கமாக இருந்து ஏனைய முன்னணி முகவராண்மைகளையும் இணைத்துக் கொண்டு ஒரு வலுவான ஒருங்கிணைப்புப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

ஈ) உயர்மட்ட அரசியல் பற்றுறுதியுடன் கழிவு முகாமைத்துவத்தை மேலும் விருத்தி செய்வதற்கு மாநகரக் கழிவுக்கான தேசிய மட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறை (ஆ) மற்றும் தலைமை அங்கத்தின் (இ) செயல்திறன் ஆகியவை ஆண்டுதோறும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

உ) உயர்மட்ட அரசியல் பற்றுறுதியுடன் முரண்பாடற்ற கழிவுச் சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதலுக்கான இடங்களைப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்புடன் தீர்மானம் எடுப்பதன் ஊடாக இணக்கப்பாடு மற்றும் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும் பொருட்டு வலுவான நிறுவனப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

ஊ) வெளிப்படையான அறிக்கையிடல் மற்றும் பின்னூட்ட முறைமை களைக் கொண்டு எதிர்பார்க்கப்படும் சேவையை வழங்குவதில் உயர் பொறுப்புக்கூறலை நாடெங்கிலும் பிரதிபலிக்கும் வகையில் பேண்தகு கழிவு முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காகத் தலைமை அங்கத்தினால் (இ) விளைதிறனுள்ளதும் வினைத் திறனுள்ளதுமான வள நகர்வு உத்திகள் தொடர்பான ஒப்பந்தங் களைக் கட்டியெழுப்புவதற்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

எ) வெளிப்படையான அறிக்கையிடல் மற்றும் பின்னூட்ட முறைமை-களுடன் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப செயற்படும் பொருட்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வசதியளிப்பதற்கான பொறிமுறைகள் உருவாக் கப்படவேண்டும்.

ஏ) சமுதாயங்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பங்குதாரர்களுடன் நாளாந்த நேரடித் தொடர்பாடல் வசதிகள் மற்றும் பின்னூட்ட முறை மைகளுடனான கழிவு முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான மற்றும் பொறுப்புக்கூறத்தக்க குறித்த துறையில் தொழில்நுட்பத் தகைமை யினைப் பெற்ற/ பயிற்றுவிக்கப்பட்ட பணியாளருடனான கழிவு முகா மைத்துவ அலகுகளை / திணைக்களங்களை உள்ளூர் அதிகார சபைகள் நிறுவவேண்டும்.

### 8.4.2 அரசாங்க மற்றும் தனியார் துறை

அ) முறையான கையாள்தல், சேமித்து வைத்தல் மற்றும் வேறு கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான முறைசாராத் துறை-களை ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத்தின் பிரதான பாய்வில் இணைத்து அவற்றின் திறனைக் கட்டியெழுப்புவதற்கான பொறிமுறைகள் விருத்தி செய்யப்படவேண்டும்.

ஆ) கழிவு முகாமைத்துவத்தில் மிக உயர்ந்தளவு பொறுப்போடும் பொறுப் புணர்வோடும் நாடெங்கிலும் நிலைக்குத்து மற்றும் கிடை மட்டத்தி லான ஒருங்கிணைப்பைப் பெற்ற அரசாங்க மற்றும் தனியார் துறை களுடன் ஒத்துழைப்பதற்கான பொறிமுறைகள் உரிய முன்னணி நிறுவனங்களாலும் முகவாண்மைகளாலும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

இ) ஒருவரோடொருவர் ஒத்துழைப்பதில் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் **'மகிழ்ச்சியான குடும்பம்'** என்பதை முக்கிய கருப் பொருளாகக் கருதிக் கழிவு முகாமைத்துவத்துக்குக் குடிமக்கள் / சமூகங்களின் அறிவார்ந்த பிரதிபலிப்புகளை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மற்றும் வலுப்படுத்துவதற்குமான பொறி முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

### 8.4.3 சமூக மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள்

அ) பொதுமக்களுக்குப் பின்னூட்டங்களுடனான தகவல்களின் எளிமை யான அணுகலுக்கு வசதியேற்படுத்துமுகமாக உரிய முன்னணி நிறுவனங்களாலும் முகவராண்மைகளாலும் தகவல் மற்றும் தொடர் பாடல் முறைமைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆ) சேவைகள் மற்றும் பிரதிபலிப்புகளின் பொறுப்புக்கூறலையும் வெளிப் படைத்தன்மையையும் பாதுகாத்துச் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களோடு மிக உயர்ந்த அளவிலான பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறைகள் சம்பந்தப் பட்ட முன்னணி நிறுவனங்களாலும் முகவராண்மைகளாலும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

### 8.4.4 கூட்டாண்மைகளைக் கட்டியெழுப்புதல்

அ) சேவை வழங்குதலில் பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத் தன்மை யையும் பாதுகாத்துத் தெளிவான பொறுப்புக்களை இனங்காண் பதன் மூலம் அனைத்து மட்டங்களிலும் விளைதிறனுள்ள கழிவு முகாமைத்துவத்தில் சம்பந்தப்பட்ட அனைவரதும் ஈடுபாட்டை உச்சப் படுத்துமுகமாக அவர்கள் அனைவரோடும் பேண்தகு கூட்டாண்மை களை ஊக்குவிப்பதற்கும், கட்டியெழுப்புவதற்கும் வலுப்படுத்து வதற்குமான பொறிமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆ) மிகச் சிறந்த செயல்முறைகள் மற்றும் வெற்றிகரமான கூட்டாண்மை களிலிருந்து கற்றுக் கொள்ளப்பட்ட பாடங்களை இனங்காண்பதற்கும் வெளியிடுவதற்குமான பொறிமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

### 8.4.5 பேரிடர் சூழ்நிலைகளில் துப்புரவாக்குதல் மற்றும் கழிவு முகாமைத்துவம்

அ) இடரின் அளவை அடிப்படையாகக் கொண்டு உரிய மட்டங்களில் பேரிடர் தடுப்புத் திட்டங்கள் அனைத்து நிறுவனங்களாலும் கிடைக்கச் செய்யப்படுவதுடன் பேரிடரைக் குறைக்குமுகமாக அவற்றின் விளை-திறன்கள் ஒழுங்காகச் சரிபார்க்கப்படவும் பதிவு செய்யப்படவும் வேண்டும்.

ஆ) மேலும் இடர்களையும் பாதிப்புறு தன்மைகளையும் குறைப்பதற்கும் சூழவுள்ள சமூகத்திற்கு மிகக் குறைந்த அளவு இடையூறுகளோடு சுத்தப்படுத்தல் செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கும் விபத்துக்கள் மற்றும் இயற்கைப் பேரிடர்கள் ஆகியவற்றிலிருந்து ஏற்படுகின்ற கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சின் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் ஒத்து ழைப்போடு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பயனர்-நேய வழிகாட்டுதல்கள் / நியமச் செயற்பாட்டு நடைமுறைகள் (SOPs) விருத்தி செய்யப்பட வேண்டும்.

இ) பேரிடர் சூழ்நிலைகளின்போது சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினை களைக் குறைத்துத் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் துப்புரவு தொடர்பான கழிவுகள் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்வதில் சிறப்பான முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### *8.5 கண்காணிப்பு, மதிப்பீடு, பின்னூட்டம் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

### 8.5.1 கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள்/ முறைமையின் செயல்திறன்

அ) வினைத்திறன் மிக்கதும் விளைதிறன் மிக்கதுமான கழிவு முகாமைத் துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் சட்டவிரோத வழக்கங்களைத் தடுப்பதற்கும் உரிய அதிகார சபைகளினால் புவியிடங் காட்டி முறைமை (GPS) மற்றும் வேறு எண்ணிம முறைமைகளைப் பயன்படுத்திப் பேண்தகு முறைப்படுத்தப்பட்ட தரவு சேகரித்தல் மற்றும் கழிவு கண்காணித்தல் முறைமைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆ) பொருள்/ உற்பத்திகள் பாய்ச்சலின் மொத்த வாழ்க்கை வட்டத்தை இணைத்துத் தவணை முறைச் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு கண்காணித்தலை உறுதிப்படுத்துமுகமாகப் பின்னூட்டப் பொறிமுறைகளைக் கொண்டு பேண்தகு பயனர்-நேய அறிக்கையிடல் முறைமைகள் முன்னணிக் கழிவு முகாமைத்துவ நிறுவனங்களி னாலும் முகவராண்மைகளினாலும் நிறுவப்பட வேண்டும்.

இ) மாநகரக் கழிவு முகாமைத்துவம், மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம், சுகாதார சேவைக் கழிவு முகாமைத்துவம், தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் முகாமைத்துவம், கட்டுமான மற்றும் இடிமானக் கழிவுகளின் முகாமைத்துவம் ஆகியவை தொடர்பான முன்னணி நிறுவனங்கள் மற்றும் அதிகார சபைகளினால் கழிவு முகாமைத்துவச் செயல்திறன் பதிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் வெளியிடப்பட வேண்டும்.

ஈ) மாகாண மட்ட மற்றும் உள்ளூர் அதிகார சபை மட்டத்திலான செயல் திறன் அடிப்படையிலான கண்காணிப்பு முறைமைகள் நாட்டில் கழிவு முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த செயல்திறனை மதிப்பீடு செய்வ தற்காகத் தேசிய மட்ட கண்காணிப்பு முறைமையோடு இணைக்கப் பட வேண்டும்.

### 8.5.2 கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்களின் செயல்திறன்

அ) சேவையின் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய பொறுப்புக் கூறலின் வினைத்திறனையும் விளைதிறனையும் உறுதிப்படுத்துவதற் கான முகாமைத்துவ முறைமையின் பகுதியாக அனைத்துக் கழிவு முகாமைத்துவ நிறுவனங்களும் மற்றும் சேவை வழங்குநர்களும் விரிவான சேவை நியமங்களை உருவாக்கிப் பேண வேண்டும்.

ஆ) பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இச் சேவை நியமங்கள் ஆண்டுதோறும் வெளியிடப்பட வேண்டும்.

இ) பொதுமக்களிடமிருந்தும் வேறு ஏதேனும் தொடர்புபட்ட நிறுவனங்க ளிடமிருந்தும் செயல்திறன் பற்றிய பின்னூட்டங்களைப் பெற்றுக் கொள்ளுமுகமாகக் கழிவு முகாமைத்துவ நிறுவனங்களினாலும் சேவை வழங்குநர்களினாலும் பயனர்-நேயப் பின்னூட்டப் பொறி முறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஈ) கழிவு முகாமைத்துவத்தின் செயல்திறன் கண்காணிக்கப்பட்டு அறிக்கை யிடப்பட்டு ஆண்டுதோறுமான நிதிக் கணக்காய்வு அறிக்கைகளினி டையே வெளியிடப்படும்.

### 8.5.3 அமுலாக்க அதிகார சபைகளின் செயல்திறன்

அ) சேவையின் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய பொறுப்புக்கூறலின் போதுமான தன்மையையும் வினைத்திறனையும் விளைதிறனையும் உறுதிப்படுத்துவதற்கான முகாமைத்துவ முறைமையின் பகுதியாக அமுலாக்க முகவாண்மையினால் சேவை நியமங்களும் செயல்திறன் சுட்டிகளும் உருவாக்கப்பட வேண்டும்.

ஆ) சேவையின் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய பொறுப்புக்கூறலை உறுதி செய்யுமுகமாகப் பொதுமக்கள் மற்றும் வேறு ஏதேனும் நிறுவனங்களிடமிருந்து செயல்திறன் பற்றிய பின்னூட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இ) குடிமக்கள், கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள், சேவை வழங்கு நர்கள் மற்றும் அனைத்து வேறு நிறுவனங்கள் ஆகியன இணக்கத் திற்கு அப்பால் செல்வதை ஊக்குவிப்பதற்குச் சூழலின் தரம், நாட்டின் தூய்மைத்தன்மை ஆகியன அமுலாக்க அதிகார சபைக ளால் காலத்திற்குக் காலம் அவதானிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, அறிக்கையிடப்பட வேண்டும்.

### 8.5.4 குடிமக்கள், சிவில் சமூகங்கள், சமூக அமைப்புகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரின் பங்களிப்பும் திருப்தியும்

அ) ''மகிழ்ச்சியான குடும்பம்'' என்பதை முன்னிலைப்படுத்தி வீட்டு மட்டத்தில் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளில் உயிர்ப்போடு ஈடுபடும் வகையில் சமூகக் குழுக்கள் தூண்டப்படவும் ஊக்குவிக் கப்படவும் வேண்டும்.

ஆ) கழிவு முகாமைத்துவத்தில் சமூகப் பங்களிப்பின் சாதகமான விளைவு கள் மற்றும் உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாமையின் பாதகமான தாக்கங்கள் மீதான சமூகக் குழுக்களின் புத்தாக்கம், ஆக்கபூர்வச் சிந்தனை, மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் அவர்கள் மத்தியில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இ) தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் விளைவாக்கப்படும் சாதக மான மற்றும் பாதகமான சங்கிலித் தொடரான எதிர்வினை களுடனான சாதகமான அதேபோல் பாதகமான விளைவுகள் மற்றும் தாக்கங்களுடன் மேலும் முறைமை மேம்பாடுகளை ஊக்குவிப்ப தற்குக் குடிமக்கள் ஆலோசனைகளை ஊக்குவிப்பதற்கான மற்றும் நாட்டின் கழிவு முகாமைத்துவத்தின் செயல்திறன் மீதான குடிமக்கள் அறிக்கைகளை ஆண்டுதோறும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

### 8.5.5 முழு நாட்டினதும் தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றம்

அ) உள்ளூர், மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் முழு நாட்டினதும் காட்சி மாசடைதலைக் குறைத்துத் தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றம் பற்றி அறிக்கையிடுவதற்கும் தகவல் களை வெளியிடுவதற்கும் முன்னணி முகவாண்மைகள் கட்டாயமாக் கப்பட வேண்டும்.

ஆ) முழு நாட்டிலும் உள்ளூர் மட்டத்தில் சாதகமான விளைவுகளை மேம்படுத்துவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் ஊக்குவிப்பதன் மூலம் தூய்மைத்தன்மையின் அடிப்படையில் கழிவு முகாமைத்துவத்தில் குடிமக்களின் பங்களிப்பு இனங்காணப்பட வேண்டும்.

## *8.6 சட்ட மற்றும் அமுலாக்கப் பொறிமுறைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

8.6.1 அனைத்துக் குடிமக்களும் நிறுவனங்களும் கழிவு உருவாக்குபவர் கள் என்ற வகையில் அவர்களது ஈடுபாட்டின் அளவின் அடிப்படை யில் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடச் சட்டரீதியாகப் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

8.6.2 யாதேனும் ஒரு உற்பத்தியின் வாழ்க்கை வட்டம், உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புள்ள சேவைகளினூடாகக் குடிமக்கள், நிறுவனங்கள், கழிவு முகாமையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் வகையில் விளைதிறனுள்ள சட்ட அமுலாக்கம் உறுதிப்படுத்தப்படும்.

8.6.3 இணக்கமின்மைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பொறுப்பான தலைமை அதிகாரத்தை நிர்ணயிக்கின்ற பொதுமக்களுக்கான வழி காட்டுதல்கள் கிடைக்கச் செய்யப்படும்.

8.6.4 சுற்றாடல் அமைச்சானது நேரிய கழிவு முகாமைத்துவ அணுகு முறைகளிலிருந்து (உருவாக்கு, பயன்படுத்து, அகற்று என்று பொருள்படும்) விலகிச் சுற்று முறைமைகளை (இயன்றவரையான காலத்திற்கு வளங்களை பயன்பாட்டில் வைத்திருந்து, பயன்பாட்டி லிருக்கும்போது அவற்றிலிருந்து உச்சப் பெறுமதியைப் பெற்றுக் கொண்டு, அவற்றின் சேவை வாழ்வின் இறுதியில் உற்பத்திகளை யும் பொருட்களையும் மீட்டெடுத்து, மீள்உருவாக்குதல் என்று பொருள்படுவது சுற்றுப் பொருளாதாரம் என்று குறிப்பிடப்படும்) நோக்கி நகர்ந்து தேவையான மாற்றத்தை அடைவதற்கான தேசியக் கொள் கையின் அமுலாக்கத்திற்கு உறுதுணைபுரியுமுகமாகத் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பொருத்தப்பாடு, போது மானதன்மை, வினைத்திறன் மற்றும் விளைதிறன் ஆகியன பற்றிய விரிவானதொரு மீளாய்வை மேற்கொள்ளவேண்டும்.

8.6.5 இக்கொள்கையின் ஏற்பாடுகளைக் கண்காணித்து, மதிப்பிட்டு மற்றும் விளைதிறனோடு நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிக்கப்பட்ட பொறிமுறை ஒன்றினை மத்திய சுற்றாடல் அதிகார சபை நிறுவ வேண்டும்.

8.6.6 தற்போதைய நிலைமையையும் எதிர்காலப் போக்குகளையும் கருத் தில் எடுத்துக்கொண்டு எல்லா மட்டங்களிலும் தற்போதைய சட்ட முறைமைகளிலுள்ள ஏற்பாடுகளைப் புதுப்பித்தும் மேம்படுத்தியும் ஒரு விரிவான சட்டமுறைமை உருவாக்கப்பட வேண்டும்.

8.6.7 நீண்டகாலத் தீர்வுகளாகச் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய அதேவேளை குறுகிய மற்றும் இடைக் காலத்தில் தற்போதுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் துணைச் சட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் மீளுருவாக்குவதற்குமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படவேண்டும்.

8.6.8 உள்ளூர் அதிகார சபை, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் ஆண்டுதோறுமான செயல்திறனைக் கண்காணித்தல், பதிதல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகளோடு சுற்றாடல் காவல்துறை வலையமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் முழு நாட்டையும் உள் ளடக்கும் வகையில் தற்போதுள்ள அமுலாக்கப் பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்படவும் விரிவுபடுத்தப்படவும் வேண்டும்.

8.6.9 வலுவான முரண்பாட்டுத் தீர்மானப் பொறிமுறை ஒன்று பின்வருவன வற்றிற்குத் தீர்வு காண்பதற்கு நாட்டினுள் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் உருவாக்கப்படும் 1) உள்ளூர் மட்டத்தில் கழிவு சார்ந்த சச்சரவுகள் 2) சர்வதேச மட்டக் கழிவு களின் எல்லை கடந்த அசைவுகள் தொடர்பான சச்சரவுகள்.

### *8.7 நிதிப் பொறிமுறைகள் மற்றும் நிதிசாராச் சலுகைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

8.7.1 பொருத்தமான தனியார் அரச கூட்டாண்மையுடன் கழிவு முகாமைத் துவத்தின் செலவுச் சிக்கனத் தன்மையை மேம்படுத்துவதற்கு உரிய சந்தைப் பொறிமுறைகளும் கருவிகளும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.7.2 வருமானத்தை உருவாக்கவும் உற்பத்திகளின் முகாமைத்துவத்தை வினைத்திறனுள்ளதாகவும் விளைதிறனுள்ளதாகவும் உறுதிப்படுத்த வும் மாசுபடுத்துபவர் செலுத்துவார் மற்றும் விரிவாக்கப்பட்ட உற் பத்தியாளர் பொறுப்பு ஆகிய கோட்பாடுகள் பயன்படுத்தப்படும்.

8.7.3 மாசுபடுத்துபவர் செலுத்துவார் கோட்பாடு மற்றும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்படும் வருமானம் முழுக் கழிவு முகாமைத்துவ வட்டத்திலும் முறைமை வினைத்திறனை மேம்படுத்தப் பயன்படுத்தப்படவேண்டும்.

8.7.4 சுற்றாடல் நேயப் பேண்தகு கழிவு முகாமைத்துவத்தில் இயந்திரங் கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் இறக்குமதிக்குப் பொருத்தமாக வரிச்சலுகைகள் வழங்குவதற்கான பொறி முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.7.5 சுற்றாடல் நேயப் பேண்தகு கழிவு முகாமைத்துவத்தில் கழிவு முகா மைத்துவ உள்ளூர்க் கைத்தொழில்களின் பற்றுறுதி மற்றும் பொறுப் புக் கூறலை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கு ஊக்கமளிப்ப தற்குப் பொருத்தமான நிதிப்பொறிமுறைகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.7.6 கழிவு குறைத்தல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பயன் பாட்டிற்குப் பொருத்தமாகக் குறைந்த வட்டிக் கடன்கள் மற்றும் மானியங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

8.7.7 நிதி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் உரிய பங்குதாரர் அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களினால் கழிவு முகாமைத் துவத்திற்காகப் பேண்தகு பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும்.

8.7.8 சேவை வழங்குதலில் உரித்தாண்மையையும் பொறுப்புக்கூறலையும் பாதுகாத்துக்கொள்வதன் மூலம் எல்லா மட்டங்களிலும் விளை திறனுள்ள கழிவு முகாமைத்துவத்துக்கு வசதியேற்படுத்துவதற்கான ஓர் ஒருங்கிணைந்த நிதிப்பொறிமுறை நிதி அமைச்சினால் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.7.9 அரசாங்க ஊக்குவிப்புத்தொகைத் திட்டத்திற்கான சுற்றாடல் இணக்க மானது நிபந்தனைக்குட்பட்டதாக்கப்படும்.

8.7.10 கழிவு முகாமைத்துவத்திலுள்ள மிகச் சிறந்த செயல்முறைகள் மற்றும் முறைமை மேம்பாடுகளின் அடிப்படையில் நிதி ஊக்கு விப்புத்தொகைகள் விரிவாக்கப்படும்.

## *8.8 சர்வதேச உடன்படிக்கைகள் / சமவாயங்களுடனான இணக்கம் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

8.8.1 இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ள சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்களுக்கான பற்றுறுதிகள் சர்வதேசச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இணக்கத்திற்கு அப்பால் செல்லும் இலக்குகளோடு மதிக்கப்பட வேண்டும்.

8.8.2 இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவிடத்துத் தற்போ துள்ள சட்டப் பொறிமுறைகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

8.8.3 இலங்கை ஏற்று அங்கீகரித்துள்ள சர்வதேச உடன்படிக்கைகளுக் கான உள்ளூர்ப் பற்றுறுதிகள் மற்றும் இணக்கத்தில் குடிமக்களின் பங்கு ஆகியவை தொடர்பாகப் பொதுமக்களுக்கும் ஏனைய நிறு வனங்களுக்கும் அறிவூட்டுவதற்காகத் தொடர்புடைய அதிகார சபை களினால் தகவல் பரப்பல் முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

8.8.4 இலங்கையின் மிகச் சிறந்த செயல்முறைகள், சாதனைகள் மற்றும் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் ஆகியவை தொடர்பாகச் சர்வதேச சமூகத்திற்கு அறிவூட்டுவதற்கான தகவல் பரப்பல் முறைமைகள் உருவாக்கப்படும்.

## 8.9 *முன்னோக்கிய நடவடிக்கைகள் தொடர்பான கொள்கை அறிக்கைகள்*

8.9.1 இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஓராண்டு காலப் பகுதியினுள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதமான குறுகிய, இடைக் கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட சிறப்பு இலக்குகளை நோக்கமாகக் கொண்டு அனைத்துத் தொடர் புள்ள கழிவுத் துறைகள் மற்றும் பிரிவுகளை உள்ளடக்கிய கொள்கைகளின் விளைதிறனுள்ளதும் வினைத்திறனுள்ளதுமான அமுலாக்கத்திற்கு வசதியேற்படுத்துவதற்கான உத்திகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.9.2 முன்னுரிமைச் செயலாகப் பொதுமக்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஆண்டுதோறுமான செயல்திறனை அறிக்கையிடும் பொருட்டு முறை மைச் செயல்திறனுக்கான தவணைமுறைச் சரிபார்த்தலுக்கான வலு வான பொறிமுறைகளுடன் கூடிய மாநகரக் கழிவு முகாமைத்துவத் திற்கான பேண்தகு ஒருங்கிணைப்பு, தொடர்பாடல் மற்றும் அறிக்கை யிடல் முறைமைகள் நிறுவப்பட வேண்டும்.

8.9.3 சுற்றாடல் அமைச்சின் ஒத்துழைப்போடு மூன்று மாதங்களுக்குள் செயல்திறன் அறிக்கையிடல் வடிவங்கள் அனைத்து முன்னணி நிறுவனங்களினாலும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.9.4 உடனடி நடவடிக்கை தேவைப்படும் தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குறிப்பிட்ட கால இலக்குகளுடன் மாநகரக் கழிவு முகாமைத்துவத்துக்கான ஒரு உத்தியும் ஒரு குறுகிய காலச் செயல் திட்டமொன்றும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

8.9.5 ஓராண்டினுள் மாநகரக் கழிவுகளின் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் ஆகியவற்றுக்குப் பொருத்தமான காணிகளை மாகாண சபைகள் உள்ளூர் அதிகார சபைகளின் ஒத்துழைப்போடு இனங்காண மற்றும் சட்ட ரீதியாக ஒப்படைக்க வேண்டும்.

8.9.6 இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆறு மாதகாலத்தினுள் பொருத் தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் சுற்றாடல் ரீதியாகச் சிறந்ததொரு முறையில் உட்கட்டமைப்புகளை விருத்தி செய்வது தொடர்பாகக் கழிவு முகாமையாளர்களுக்கு வழிகாட்டுவதன் மீது சிறப்புக் கவனம் செலுத்தி அர்ப்பணிக்கப்பட்ட திறன்விருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் வடிவமும் கட்டமைப்பும் விருத்தி செய்யப்பட வேண்டும்.

# கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கை

## கழிவு முகாமைத்துவத்திற்கான பங்குதாரர் பொறுப்புகள் மற்றும் உறவுகள்

**முன்னுரை**

அதிகளவு தேவைப்படும் சமூக மாற்றத்தினூடாக முழு நாட்டினதும் பேண்தகு கழிவு முகாமைத்துவத்திற்கான உயர்மட்ட ஒத்துழைப்பு மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பொதுவான எனினும், வேறுபட்ட பொறுப்புக் கோட்பாட்டைப் பின்பற்றுதல் இக்கொள்கை ஆவணத்தில் முக்கிய மாக வலியுறுத்தப்படுகின்றது.

இத் தேசியக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது பொறுப்பேற்க மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய பங்குதாரர்கள் தொடர்பான தகவல்கள் இணைப்பு 1 இன் மூலம் குறிப்பிடப்படுகின்றன. ஏனைய அனைத்து (அரச, தனியார், அரச சார்பற்ற மற்றும் பிற எவ்வகையான) நிறுவனங்களும் சமூகம் முழுவதும் இந்தக் கொள்கையின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் பணிக்கூற்று என்பவற்றினை உணரும் வகையில் தனித்தனியான மற்றும் கூட்டுப் பொறுப் புகளைக் கொண்டிருக்கின்றன.

அ) கழிவு முகாமைத்துவம் தொடர்பான பங்குதாரர் பொறுப்புக்கள்:

(அ) கழிவு முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அமைச்சுகள்

### 1) சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தேசியக் கொள்கைகள், ஒருங்கிணைப்பு மற்றும் அதன் அமுலாக்கத்திற் கான வசதியளித்தலுக்கான உருவாக்கம்; நாட்டின் கடப்பாடுகளை நிறை வேற்றுவதற்காகக் கேந்திர நிலையமாக இலங்கையினால் கைச்சாத்திடப் பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுடன் (பாசல் சமவாயம், நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் பற்றிய ஸ்டொக்ஹோம் சமவாயம், மினமாட்டா, மொன்றியல் உடன்படிக்கை, ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் பற்றிய கட்டமைப்புச் சமவாயம் மற்றும் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய அனைத்து விதமான புதிய சர்வதேச சமவா யங்கள்) தொடர்புடையதான ஒருங்கிணைப்பு, சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் தகவல் பரிமாற்றம். முக்கிய செயல்திறன் சுட்டிகளுடனான நேரத்திற்குக் கட்டுப்பட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட பிரதான திட்டங் களின் உருவாக்கம். ஒட்டுமொத்தச் செயல்திறன் கண்காணிப்பு, ஏனைய முன்னணி நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடனான சுற்றாடல் தரம் உள்ளிட்ட செயல்திறனைத் தவணைமுறையில் மதிப்பிடுதல் மற்றும் வெளியிடுதல்.

## 2) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு / அமைச்சுகள்

தேசிய கொள்கைக்கு ஏற்ப துறைசார் மற்றும் துணைத்-துறைசார் கொள்கைகளின் உருவாக்கம், தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் தேசிய கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான வசதியளித்தல், இரட்டிப்பைத் தவிர்த்து அனைத்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளை உள்ளடக்கும் வகையில் மனித, நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களின் நகர்வுக்கான உத்திகளின் உருவாக்கம், மாநகரத் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் மீதான மனித வள மற்றும் நிதி வள முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சிச் செயற்பாடுகள் பற்றிய தவணைமுறை ஆய்வுகளை மேற்கொள்ளல், மாநகரத் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான நேரத்திற்குக் கட்டுப்பட்ட பிரதான திட்டங்களை உருவாக்குதல், செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல், பின்னூட்டப் பொறிமுறைகளுடனான மாநகரத் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் செயல்திறன் பற்றிய தகவல் பரிமாற்றம்.

## 3) நிதி மற்றும் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு / அமைச்சுகள்

பேண்தகு நிதிப்பொறிமுறைகளின் உருவாக்கம்; இரட்டிப்பைக் குறைப்பதற்கான தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டத்திலான நிதி வள நகர்வு; மாசுபடுத்துபவர் செலுத்துவார் கோட்பாட்டுடன் இணைந்த வருமான உருவாக்கம் மற்றும் நாட்டில் பேண்தகு கழிவு முகாமைத்துவத்தின் அமுலாக்கத்திற்கு ஆதரவு வழங்குதலுக்கான சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருத்தமான கருவிகளை உருவாக்குதல்; கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதியை வழங்கும்போது சுற்றாடல் சார் காரணங்களை (considerations) நிபந்தனையாக்குதல்.

## 4) சட்டம் மற்றும் ஒழுங்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு / அமைச்சுகள்

இணக்கமின்மைக்கு எதிராகக் காலத்திற்குத் தகுந்த மற்றும் பொறுப்புள்ள செயலை மேம்படுத்துவதன் மூலம் பொது மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினாலும், கழிவு முகாமைத்துவ ஒழுங்கு விதிகளுக்கு ஏற்பச் செயற்படும் பொருட்டு ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துதல் மற்றும் தேவையான இடங்களில் கற்பித்தல்.

## 5) விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு /அமைச்சுகள்

குறைந்த செலவுடன் கூடிய பொருத்தமான கழிவு சுத்திகரிப்புத் தொழில்நுட்ப முறைமையின் அறிமுகத்துடனான உரிய தொழில்நுட்ப உருவாக்கம்; ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி; கழிவு தொடர்பான தரவுகள் சேகரிப்பு;

போக்கின் பகுப்பாய்வு, செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; பின் னூட்டப் பொறிமுறைகளுடனான செயல்திறன் அறிக்கையிடல், சிறப்பான செயல்முறைகளின் இனங்காணலும் வெளியீடும், சிறப்பான செயல்முறை களுக்கு வெகுமதியளித்தல்.

### 6) நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு /அமைச்சுகள்

நகரத் திட்டமிடலின் போதான உட்கட்டமைப்பு வசதிகளின் ஏற்பாடு; கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கைகளின் அமுலாக்கத்திற்கு வசதியளித்தல், இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவகற்றல் செயற்பாடு களுடன் தொடர்புடைய சவால்கள் பற்றிய தவணைமுறை மதிப்பிடல் மற்றும் பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய தொடர்புடைய பங்குதாரர் களுடனான ஒத்துழைப்புடன் அவ்வாறான நிகழ்வுகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல், தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றங்களின் வெளியீடு.

### 7) வீடமைப்பு மற்றும் கட்டுமானங்களின் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சு

வீடமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளின் போது, உருவாக்கப்படுகின்ற கழிவு முகாமைத்துவத்திற்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப் பனவை உறுதிப்படுத்துவதற்கான அவ் விடயப் பரப்பினுள் வருகின்ற கொள் கைகளை உருவாக்குதல். பின்னூட்டப் பொறிமுறைகளுடனான செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு. தேசிய கழிவு முகாமைத்துவக் கொள் கைக்கு ஏற்ப கட்டுமான மற்றும் இடிமானக் கழிவுகளை முகாமை செய்யத் துறைசார் மற்றும் துணைத்-துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல்.

### 8) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு

கழிவுநீர் மற்றும் சாக்கடை நீர்ச் சுத்திகரிப்புக்கான உட்கட்டமைப்பு வசதி களை வழங்குவதற்கான கொள்கைகள் மற்றும் உத்திகளின் தயாரிப்பு. நீர் நிலைகளின் மாசடைதலைத் தடுப்பதற்குக் கழிவுநீர் மற்றும் சாக்கடை நீர்ச் சுத்திகரிப்பு வசதிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த உள்ளூர் அதிகார சபைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல். பின்னூட்டப் பொறிமுறைகளுடனான செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.

### 9) வெகுசன ஊடக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தேவைப்படும் சமூக மாற்றத்திற்கு உதவும் வகையில் நாடளாவிய ரீதியில் கழிவுத் துறை பற்றிய அறிவு மற்றும் தகவல்களைப் பரப்புவதற்கான தொடர்ச்சியான பொது விழிப்பூட்டல்களின் உருவாக்கம்.

## 10) சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு /அமைச்சுகள்

**சுகாதாரம்**

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள், என்பவற்றுக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல், அமுலாக் கத்திற்கான வசதியளித்தல்; உரிய கழிவு முகாமைத்துவத் தொழில்நுட்பங் களின் உருவாக்கத்திற்கு வசதியளித்தல்; தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபை மட்டங்களில் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வசதியளித்தல்; மனிதவள அபிவிருத்தி மற்றும் இயலளவைக் கட்டியெழுப் புதல்; வழிகாட்டல்கள் மற்றும் தவணைமுறைப் புதுப்பிப்பு; தவணைமுறைத் தரவுகள் சேகரிப்பு, செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, பின்னூட் டத்திற்கான அணுகலுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான அறிக்கை யிடல் மற்றும் தகவல் பரிமாற்றம்.

**சுதேச மருத்துவம்**

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள், என்பவற்றுக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல், அமுலாக் கத்திற்கான வசதியளித்தல்; உரிய கழிவு முகாமைத்துவத் தொழில்நுட்பங் களின் உருவாக்கத்திற்கு வசதியளித்தல்; செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம்.

## 11) கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு /அமைச்சுகள்

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள், என்பவற்றுக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல், அமுலாக் கத்திற்கான வசதியளித்தல்; உரிய கழிவு முகாமைத்துவத் தொழில்நுட்பங் களின் உருவாக்கத்திற்கு வசதியளித்தல்; கழிவுப் பரிமாற்று நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்; பொதுச் சுத்திகரிப்பு வசதிகளின் பயன் பாட்டுக்காகக் கைத்தொழில் அலகுகளின் கொத்தணிப்படுத்தலை ஊக்கு வித்தல்; இயலளவைக் கட்டியெழுப்புதல்; தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் இடமாற்றம்; ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி; கழிவு தொடர்பான தரவுகள் சேகரிப்பு; பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய செயல்திறன் கண் காணிப்பு மற்றும் மதிப்பீடு, சிறப்பான செயல்முறைகளின் இனங்காணலும் வெளியீடும்; சிறப்பான செயல்முறைகளுக்கு வெகுமதியளித்தல்.

## 12) விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள், என்பவற்றுக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல், அமுலாக் கத்திற்கான வசதியளித்தல்; தரவுகள் சேகரித்தல்; செயல்திறன் கண் காணிப்பு மற்றும் மதிப்பீடு, பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய முன் னேற்றம் உள்ளடங்கலான அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம்.

## 13) தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

சுற்றாடல் நேயமிக்க தொழில் முயற்சிகளை நிறுவுதலை ஊக்குவிப்பதன் மூலம் துறைசார் கொள்கைகளை அமுல்படுத்தல் மற்றும் பசுமைத் தொழில்களைப் பொருளாதாரச் சாத்தியமான மற்றும் பேண்தகு முறையில் உருவாக்கும் வகையில் கழிவுத் துறையில் தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் நிறுவல்.

## 14) மின்சக்தி மற்றும் வலு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

மின்சக்தி மற்றும் வலுத் துறை சார்ந்த கழிவு முகாமைத்துவம் தொடர்பான துறைசார் கொள்கைகளின் அபிவிருத்தி மற்றும் அவற்றின் அமுலாக்கத்தை உறுதிப்படுத்துதல். கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான உட்கட் டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, அலுவலர்களின் இயலளவு விருத்தி, தரவுகள் சேகரிப்பு, ஒட்டுமொத்தக் கண்காணிப்பு மதிப்பீடு மற்றும் தவணை முறை அறிக்கையிடல்.

## 15) போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள், என்பவற்றுக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளைத் தயாரித்தல், அமுலாக் கத்திற்கான வசதியளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 16) துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

கடல்சார் மற்றும் கரையோரச் சுற்றாடல் மாசடைதலைத் தடுத்தலுக்கான தேசியக் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசை வுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்ப வற்றைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல்; தவணை முறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 17) தொலைத்தொடர்புகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

ஆயுட்காலம் முடிவடைந்த தொலைத்தொடர்புக் கருவிகளின் முகாமைத் துவத்தின் பொருட்டுத் தேசியக் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் எதிர்காலப் போக்குகள் என்பவற்றின் மீது கவனம் செலுத்திக் கழிவு உருவாவதைத் தடுத்தல் அல்லது குறைத்தல் என்பவற்றுக்கான கொள்கை களைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல்; தவணை முறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 18) பேரிடர் முகாமைத்துவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பேரிடர் நிலைமையிலான கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். அவசரகால ஆயத்தத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் விளைதிறனுக்கான தவணை முறைக் கண்காணிப்பு. அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல்; தொடர்புள்ள தரவுகள் சேகரித்தல் மற்றும் இடர் குறைப்புக்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத் திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறை களுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 19) பெற்றோலிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

பெற்றோலிய எச்சங்கள் மூலம் ஏற்படக்கூடிய நிலம் மற்றும் நீர் மாசடை தலைத் தடுக்கும் பொருட்டுத் தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறை சார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதி யளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற் கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 20) சுற்றுலாத்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் சுற்றுலாத்துறையிலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான

துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். கழிவு முகாமை செய்வதில் பொறுப்புள்ள சமூகம் என்ற இலங்கையின் தோற்றத்தினை மேம்படுத்துவதற்கான அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுக லுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 21) கல்வி மற்றும் உயர்கல்வி விடயங்களிற்குப் பொறுப்பான அமைச்சு / அமைச்சுகள்

பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்களிடையே செய்தி பரந்த அளவில் சமூகத்தை அடையச் செய்யும் வகையில் பொறுப்புள்ள கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசை வுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்ப வற்றைத் தயாரித்தல். பாடசாலை மாணவர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள் கழிவு முகாமைத்துவத்தில் தொழில் வல்லுனர்களாக வருவதற் கான இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான பாடத்திட்டத்தைத் தயாரித்தல். தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுக லுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 22) கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வள விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தொடர்புள்ள பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாகக் கடல்சார் மற்றும் கரையோரச் சுற்றாடலில் ஏற்படுகின்ற மாசடைதலை தடுப்பதற்காகத் தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறை சார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதி யளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற் கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 23) வர்த்தக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

தொடர்புள்ள பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் வர்த்தக வட்டம் மற்றும் செயல்முறையின் ஒரு பகுதியாகக் கழிவு முகாமைத்துவத்தை ஊக்கு விக்கும் பொருட்டுத் தேசிய கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார்

கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பை (EPR) ஊக்குவித்தல். அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 24) விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்தில் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்குத் தேசிய கொள்கைக்கு இசைவுறும் வகையிலான துணைத்-துறைசார் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தலும் அமுல்படுத்தலும்; தரவுகள் சேகரித்தல்; செயல் திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம். ஆய்வு மற்றும் அபிவிருத்தி;

ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள்

மாகாண சபைகள்

மாகாண நிரல் அமைச்சுக்களுடன் பொருத்தமான முறையில் திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவுகள் உள்ளடங்கலாகக் கழிவின் அனைத்து வகை களையும் உள்ளடக்கிய தேசியக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக வசதியளிக்கும் பொருட்டு உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள் என்ப வற்றினைத் தயாரித்தல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடனான செயல்திறன் கண்காணிப்பு, பதிவுசெய்தல், மதிப்பீடு மற்றும் ஆண்டு தோறும் அறிக்கை யிடல்; தேவையான பதவியணி, வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவி கள் போன்ற தேசியக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான முக்கியமான வளங்களை உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கும் பொருட்டு உத்திகள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் இயலளவை அடிப்படையாகக் கொண்டு நிருவாக, முகாமைத்துவ, திறன்விருத்தி உள்ளிட்ட தொடர்புடைய ஊழியரின் இயலளவை அடிக்கடி கட்டியெழுப்புதல்; கழிவுச் சேமிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் என்ப வற்றுக்கான காணிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்; தொடர்ச்சியான அடிப்படையில் பொதுக் கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்; உள்ளூர் அதிகார சபைகளின் செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மற்றும் பொதுமக்களுக்குத் தகவல் வழங்கும் பொருட்டு ஆண்டுதோறும் செயல்திறனை அறிக்கையிடல்; சிறந்த செயற்பாடு களை இனங்காண மற்றும் அவற்றைப் பரப்புவதற்குச் செயல்திறன் மதிப் பீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்தல். தூய்மையான இடங்கள் மற்றும் அவற்றின் பேண்தகைமையினை இனங்காணும் பொருட்டு மாகாணத்தில்

உள்ள தூய்மையான இடங்களை நியமித்தல்; சேவை வழங்குதலில் பொறுப்புக்கூறல் செயல்திறனைத் தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றின் பொருட்டு உள்ளூர் அதிகார சபைகளுக்கு ஆண்டுதோறும் போதிய வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை உறுதி செய்தல்.

உள்ளூர் அதிகார சபைகள்

தேசியக் கொள்கைகளுக்கு ஏற்ப மனிதக் கழிவுகள் மற்றும் கழிவுநீர் உள்ளிட்ட மாநகரக் கழிவுகளின் முகாமைத்துவத்திற்காக உத்திகள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் தொடர்புள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தேசியக் கொள்கையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு உள்ளூர் மட்டத்தில் ஏனைய கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகளை அமுல்படுத்து வதற்கான வசதிகளை வழங்குதல்; கழிவுச் சேமிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றலுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்; பொது மக்களின் ஒத்துழைப்புடன் பிரதேசங்களின் தூய்மைத் தன்மையைப் பேணுதல்; சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் பொதுமக்கள் தொந்தரவு என்பன ஏற்படும் வகையில் எக் கழிவும் முறையற்ற விதத்தில் அகற்றப் படாதிருப்பதை உறுதி செய்தல்; தத்தமது பிரதேசங்களில் குடிமக்களின் பங்களிப்பை அதிகரிக்க மற்றும் கழிவு உருவாக்கப்படுவதைக் குறைக்கும் பொருட்டு ஊக்குவிப்புத் தொகைத் திட்டங்களை அறிமுகம் செய்தல்; செயல் திறனைக் கண்காணித்தலும் மதிப்பிடலும் மற்றும் பின்னூட்ட அணுகலுடன் தேசிய அதிகார சபைகள் மற்றும் பொது மக்களுக்குத் தவணைமுறையில் முன்னேற்றத்தை அறிக்கையிடல்.

இ) அரச திணைக்களங்கள்

## 1. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்

மூல இடங்களில் கழிவுகளைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பாகச் சிறப்பு வலியுறுத்தலுடன் கூடிய (எ.கா: தங்குமிடங்கள், ஏனைய வணிகச் செயற்பாடுகள் என்பன உட்படக் கடற்கரைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள்) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் விடயப் பரப்பினுள் திரவ, திண்ம, மற்றும் வாயுக் கழிவு உள்ளடங்கலாக அனைத்து வகைக் கழிவுகளையும் உள்ளடக்கி முகாமைத்துவம்/ கண் காணிப்பு/ ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கான தேசியக் கொள்கைக்கு ஏற்ப உத்திகள் மற்றும் செயல் திட்டங்களைத் தயாரித்தல்; செயல்திறன் கண் காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடுதல், செயல்திறன் மீதான தகவல் பரிமாற்றம்.

## 2. விவசாயம்/ ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

தேசிய மற்றும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளின் அமுலாக்கத்திற்கு வசதியளித்தல்; தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் இடமாற்றம்; தரவுகள் சேகரித்தல்; செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான அறிக்கையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம். ஆய்வு மற்றும் அபிவிருத்தி.

## 3. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

ஆயுட்காலம் முடிவடைந்த வாகனங்களின் கையாளுகை, வாகன உமிழ்வுப் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கம்; தொழில்நுட்ப அபிவிருத்தி; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கு அணுகலுடைய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

எல்லை கடந்த கழிவுகளின் நகர்வைக் கட்டுப்படுத்தல் மற்றும் உற்பத்திகள் மற்றும் வளங்கள் மற்றும் பிற சட்ட விரோதப் போக்குவரத்து ஆகிய போர்வைகளின் கீழ் நாட்டினுள்ளே கழிவுகள் உள்நுழைதலைத் தடுப்பதற்காக உத்திகள் மற்றும் சிறப்பு ஒழுக்க விதிகளைத் தயாரித்தலும் அமுல்படுத்தலும்.

## 5. இலங்கைச் சுங்கத் திணைக்களம்

எல்லை கடந்த கழிவுகளின் நகர்வைக் கட்டுப்படுத்தல் மற்றும் உற்பத்திகள் மற்றும் வளங்கள் மற்றும் பிற சட்டவிரோதப் போக்குவரத்து ஆகிய போர்வைகளின் கீழ் நாட்டினுள்ளே கழிவுகள் உள்நுழைதலைத் தடுப்பதற்காக உத்திகள் மற்றும் சிறப்பு ஒழுக்க விதிகளைத் தயாரித்தலும் அமுல்படுத்தலும்.

## 6. வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

மாசுபடுத்துபவர் செலுத்துவார் மற்றும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புக்கள் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு கழிவு முகாமைத்துவத்திற்காகத் தேசியக் கொள்கைக்கு ஏற்ப துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்கள் என்பவற்றினை அமுல்படுத்துவதற்கான வசதியளித்தல். சர்வதேச வர்த்தகத்தின் ஊடாக ஆயுட் காலம் முடிவடைந்த அல்லது முடிவடைவதை நெருங்கியுள்ள உற்பத்திகள் நாட்டினுள் நுழைவதைத் தடுத்தல். தொழில்நுட்ப மேம்பாடுகள், மற்றும் எதிர்காலப் போக்குகள் தொடர்பாகக் கவனம் செலுத்திக் கழிவு உருவாவதைத் தடுத்தல் அல்லது குறைத்தல் என்ப

வற்றுக்கான உத்திகளைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதியளித் தல்; தவணை முறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபி விருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 7. பொலிஸ் திணைக்களம் (சுற்றாடல் பொலிஸ்)

கழிவு முகாமைத்துவச் சட்டங்கள், ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த வசதியளித்தல் மற்றும் சட்ட விரோதக் கழிவு அகற்றலைத் தடுத்தல்; செயல் திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; அறிக்கையிடல் மற்றும் பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 8. கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளத் திணைக்களம்

மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாகக் கடல்சார் மற்றும் கரையோரச் சுற்றாடல் மற்றும் உப்பு நீரேரியில் ஏற்படுகின்ற மாசடைதலைத் தடுப்பதற் காகத் தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான வசதியளித்தல். தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

ஈ) நிறுவனங்கள்/ நியதிச் சட்ட நிறுவனங்கள்

## 1. மத்திய சுற்றாடல் அதிகார சபை (ம.சு.அ.)

அனைத்து விதமான கழிவு வகைகளையும் உள்ளடக்கித் தேசிய மட்டத்திலான சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தல்.

*ஏனைய குறிப்பான பற்றுறுதிகள்*

- தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் முகாமைத்துவம் (ஒழுங்கு விதிகள்: மருத்துவ, மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு, கைத்தொழில் இரசாயனங்கள் மற்றும் ஏனைய கைத்தொழில் கழிவுகளை உள்ளடக்கும்)
- பாசல் சமவாயம், முன் அறிவிக்கப்பட்ட ஒப்புதல் (PIC) தொடர்பான ரொட்டர்டேம் சமவாயம், சர்வதேச இரசாயனங்கள் முகாமைத்துவத்திற்கான உத்திசார் அணுகுமுறை (SAICM) மற்றும் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற பிற சர்வதேச சமவாயங்களுடன் தொடர்புடைய பொறுப்புக்களைத் தேசியக் கடமைக்குப் பொறுப்பான அதிகார சபையாக நிறை வேற்றுதல்.

## 2. மேல் மாகாணக் கழிவு முகாமைத்துவ அதிகார சபை

மேல் மாகாணக் கழிவு முகாமைத்துவ நியதிச்சட்டம் மற்றும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் மேல் மாகாணத்தினுள் கழிவு முகாமைத்துவம்.

## 3. நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை

வர்த்தக வட்டத்தினுள் கழிவு முகாமைத்துவக் கொள்கைகள், உத்திகள், செயல் திட்டங்கள் மற்றும் சட்டங்களை அமுல்படுத்துவதற்கான வசதியளித்தல். தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத் திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறை களுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 4. கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளை உருவாக்குதல், நடை முறைப்படுத்துவதற்கான வசதியளித்தல், தரவுகள் சேகரித்தல்; செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, அறிக்கையிடல் மற்றும் பின்னூட்டப் பொறி முறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

- MARPOL சமவாயத்தை அமுல்படுத்துதல்.

## 5. நிலைபெறுதகு வலு அதிகார சபை

ஆயுட்காலம் முடிவடைந்த சூரியசக்திப் படல்களின் முகாமைத்துவத்தின் பொருட்டுத் தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளை உருவாக்குதல். தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் எதிர்காலப் போக்குகள் என்பவற்றின் மீது கவனம் செலுத்திக் கழிவு உருவாவதைத் தடுத்தல் அல்லது குறைத்தல் என்பவற்றுக்கான கொள்கைகளைத் தயாரித்தல். நடைமுறைப்படுத்துவதற் கான வசதியளித்தல், தவணைமுறைத் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத் திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறை களுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 6. நகர அபிவிருத்தி அதிகார சபை

நகரத் திட்டமிடலின் போதான உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடு; நடைமுறைப்படுத்துவதற்கான வசதியளித்தல்; தரவுகள் சேகரித்தல்; செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; அறிக்கையிடல் மற்றும் பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்; தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றங்களின் வெளியீடு.

## 7. உரச் செயலகம்

தீங்கு விளைவிக்கும் கழிவுகளைக் குறைக்கும் பொருட்டு உரப் பயன் பாட்டை ஒழுங்குபடுத்தல் (நச்சுக் கழிவுகள் உரங்களுடன் கலக்கப்பட்டவாறு வருகின்றன.)

## 8. கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகம்

தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளை உருவாக்குதல்; நடை முறைப்படுத்துவதற்கான வசதியளித்தல்; காலாவதியான அல்லது தேவையான பிற கிருமிநாசினித் தொகுதிகளை அகற்றுவதற்கு வசதியளித்தல்; தரவுகள் சேகரித்தல்; செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; அறிக்கையிடல் மற்றும் பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்க லான தகவல் பரிமாற்றம்.

- முன் அறிவிக்கப்பட்ட ஒப்புதல் (PIC) பற்றிய ரொட்டர்டேம் (Rotterdam) சமவாயத்தினை அமுல்படுத்தல்.

## 9. இலங்கை அணுசக்தி அதிகாரசபை/ இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை

அணுக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் வசதிகளை நிறுவுவதற்கான வழி காட்டல்களை வழங்குதல், செயல்திறன் மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல், முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளுடனான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

## 10. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

சாக்கடை மற்றும் கழிவுநீர்ச் சுத்திகரிப்புக்கான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, செயல்திறன் கண்காணிப்பு மற்றும் பின்னூட்டப் பொறிமுறை களுடன் கூடிய மதிப்பீடு.

## 11. அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்

காலாவதியான மருந்துக் கழிவு உற்பத்திகளின் பாதுகாப்பான முகாமைத் துவம், சுத்திகரிப்பு மற்றும் இறுதி அகற்றலுக்குத் தேவையான உத்தி களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கு தேவையான வசதி யளித்தல், மற்றும் மருந்து உற்பத்தியின் போதான கழிவு நீர்ச் சுத்திகரிப்புப் போன்ற சுற்றாடல் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்துதல்.

## 12. இலங்கை மின்சார சபை

கழிவு முகாமைத்துவம் பற்றிய சம்பந்தப்பட்ட துறைசார் கொள்கைகளை அமுல்படுத்தல் மற்றும் கழிவு முகாமைத்துவத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதலும் பராமரித்தலும், ஊழியரின் இயலளவு விருத்தி, தரவுகள் சேகரிப்பு, தவணை முறைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்.

## 13. கைத்தொழில் அபிவிருத்திச் சபை

தேசிய கொள்கையுடன் இசைவுறும் வகையில் கழிவு முகாமைத்துவம் பற்றிய துறைசார் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் தற்போதுள்ள மற்றும் வருங்காலச் செயற்றிட்டங்களில் கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட சிறந்த சூழலியல் நடைமுறைகளை ஒருங்கிணைப்பதற்கு வசதியளித்தல், மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி கழிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம்; கைத்தொழில்களுக்கான கொள்ளளவு, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அபிவிருத்தி, தரவு சேகரிப்பு, பேண்தகு கைத்தொழில் வளர்ச்சி என்பவற்றிற்காகக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டினை ஊக்குவித்தல்.

## 14. இலங்கை முதலீட்டுச் சபை

கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கைகளுக்கான அமுல்படுத் தலுக்கு வசதியளித்தல்; உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி; கழிவுப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்குவித்தல்; செயற்றிட்டத் திட்டமிடல் மற்றும் தயாரிப்பில் அடிப்படைத் தொடக்க நிலைத் தேவையாகக் கழிவு முகாமைத்துவத்தை ஒருங்கிணைத்தல்; கைத்தொழில் அலகுகளைக் கொத் தணிப்படுத்தல் மற்றும் பொதுச் சுத்திகரிப்பு நிலையங்களின் அபிவிருத்திக்கு உதவுதல்; இயலளவைக் கட்டியெழுப்புதல்; தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் இடமாற்றம்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; கழிவுகள் தொடர்பான தரவுகள் சேகரித்தல்; செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் செயல்திறனை அறிக்கையிடல், சிறந்த செயல்முறைகளை இனங்காணுதலும் வெளியீடும், சிறந்த செயல்முறைகளுக்கு வெகுமதியளித்தல்.

## 15. துறைமுக அதிகார சபை

கடல்சார் மற்றும் கரையோரச் சுற்றாடல் மற்றும் உப்பு நீரேரியில் ஏற்படுகின்ற மாசடைதலைத் தடுப்பதற்காகத் தேசியக் கொள்கை, உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் துறைசார்/ துணைத் துறைசார் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல். நடைமுறைப்படுத்தலுக்கான வசதியளித்தல்; தவணை முறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 16. வடமேல் மாகாணச் சுற்றாடல் அதிகார சபை

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் வடமேல் மாகாணத்தில் சட்ட அமுலாக்கம்.

## 17. இலங்கை கட்டளைகள் நிறுவகம்

கழிவுகள் சார்ந்த உற்பத்திகள் உள்ளிட்ட மீள்சுழற்சிக்குட்பட்ட மற்றும் மீள்பயன்பாட்டு உற்பத்திகள் மற்றும் பொதிகளின் தர உத்தரவாதத்திற்கான தரவரிசைகளின் அபிவிருத்தி. சுற்றாடல் நேய உற்பத்திக்கான தரவரிசைகளின் அபிவிருத்தி.

## 18. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம்

மீள்சுழற்சிக்குட்பட்ட உற்பத்திகள் மற்றும் பொதியிடல் மற்றும் கழிவு மூலம் நீர்நிலைகள் மற்றும் நிலம் மாசடைதல் என்பவற்றின் தர உத்தரவாதத்திற்கான பரிசோதனை வசதிகளை வழங்குதல்.

## 19. கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

தேசியக் கொள்கைகளுக்கேற்ப கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு முகாமைத்துவத்திற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல். அவற்றின் அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல். இயலளவைக் கட்டியெழுப்புதல்; தொழில்நுட்ப அபிவிருத்தி; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; கழிவுகள் தொடர்பான தரவுகள் சேகரித்தல்; செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் செயல்திறனை அறிக்கையிடல், சிறந்த செயல்முறைகளை இனங்காணுதலும் வெளியீடும், சிறந்த செயல்முறைகளுக்கு வெகுமதியளித்தல்.

## 20. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்

தேசியக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான வசதியளித்தல். கழிவு முகாமைத்துவத்தில் மனிதவள அபிவிருத்தி, கழிவு தொடர்பான தரவுகள் சேகரித்தல்; செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் செயல்திறனை அறிக்கையிடல், சிறந்த செயல்முறைகளை இனங்காணுதலும் வெளியீடும், சிறந்த செயல்முறை களுக்கு வெகுமதியளித்தல் மற்றும் பல்கலைக்கழகங்களிடையே தகவல் பரவலாக்கம் மற்றும் ஆய்வுகளை நடத்துவதற்காகக் கழிவு முகாமைத்துவச் சிறந்த செயல்முறை மாதிரிகளை உருவாக்குதல்.

## 21. மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம்

கழிவு நீர், சாக்கடை மற்றும் திரவக்கழிவு முகாமைத்துவத்துவம் மற்றும் கட்டுமானத் துறையின் ஏனைய வகைகள் உள்ளிட்ட கழிவு முகாமைத் துவத்தில் தேசியக் கொள்கையின் அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல். செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் செயல்திறனை அறிக்கையிடல், சிறந்த செயல்முறை களை இனங்காணுதலும் வெளியீடும், சிறந்த செயல்முறைகளுக்கு வெகுமதி யளித்தல்.

## 22. தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

ஆயுட்காலம் முடிவடைந்த தொலைத்தொடர்புக் கருவிகளின் முகாமைத் துவத்தின் பொருட்டுத் தேசியக் கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றைத் தயாரித்தல். தொழில்நுட்ப மேம்பாடுகள் மற்றும் எதிர்காலப் போக்குகள் என்பவற்றின் மீது கவனம் செலுத்திக் கழிவு உருவாவதைத் தடுத்தல் அல்லது குறைத்தல் என்பவற்றுக்கான கொள்கை களைத் தயாரித்தல். அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல். ஆய்வு மற்றும் அபிவிருத்தி.

## 23. பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம்

தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் பேரிடர் நிலையிலான கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றுக்கான அமுல்படுத்தலுக்கு வசதியளித்தல். ஆவசர கால ஆயத்தத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றின் விளைதிறனுக் கான தவணை முறைக் கண்காணிப்பு. தொடர்புள்ள தரவுகள் சேகரித்தல் மற்றும் இடர் குறைப்புக்கான ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறைகளுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 24. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் சுற்றுலாத்துறையிலிருந்து உருவாக்கப்படுகின்ற கழிவு முகாமைத்துவத்திற்கான தேசிய கொள்கைகள், உத்திகள் மற்றும் செயல் திட்டங்களுடன் இசைவுறும் வகையிலான துறைசார்/ துணைத்-துறைசார் கொள்கைகள் என்பவற்றின் அமுல்படுத்தலுக்கு வசதியளித்தல். கழிவை முகாமை செய்வதில் பொறுப்புள்ள சமூகம் என்ற இலங்கையின் தோற்றத்தினை மேம்படுத்துவதற்கான அமுல்படுத் தலுக்கான வசதியளித்தல்; தவணைமுறையில் தரவுகள் சேகரித்தல்; ஆய்வு மற்றும் அபிவிருத்தி; செயல்திறன் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் பின்னூட் டத்திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; பின்னூட்டப் பொறிமுறை களுடன் கூடிய முன்னேற்றம் உள்ளடங்கலான தகவல் பரிமாற்றம்.

## 25. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

பெற்றோலிய எச்சங்கள் மூலம் ஏற்படக்கூடிய நிலம் மற்றும் நீர் மாசடை தலைத் தடுப்பதன் மூலம் தேசிய கொள்கைகளின் அமுல்படுத்தலுக்கான வசதியளித்தல். செயல்திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; பின்னூட்டத் திற்கான அணுகலுடன் கூடிய அறிக்கையிடல்; சிறந்த செயல்முறை களை இனங்காணுதலும் வெளியீடும், சிறந்த செயல்முறைகளுக்கு வெகுமதி யளித்தல்.

*ஏனையவை*

*அ) அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக அடிப்படையிலான அமைப்புக்கள், குடிமக்கள் குழுக்கள் மற்றும் பெரும்பாலான பொதுமக்கள்*

பொருத்தமான மட்டங்களில் தேசியக் கொள்கையின் அமுலாக்கம்; சுயாதீன கண்காணிப்பு, மதிப்பீடு, அறிக்கையிடல் மற்றும் பின்னூட்டம்; இணக்கத்திற் கான ஒத்துழைப்பு; இணக்கமின்மையைத் தடுத்தல் அதேபோலப் பொருத்த மானதாக முரண்பாடு மற்றும் இடையூறுகளைத் தடுப்பதற்கான இடைத் தரகர்களாகச் செயற்படல்.

ஆ) தனியார் துறை

அனைத்து மட்டங்களிலும் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசியக் கொள்கையை வெற்றிகரமான முறையில் அமுல்படுத்துவதற்கான ஏற்பாடு களை ஒன்றிணைத்தல்; தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் இடமாற்றத்தை ஊக்குவித்தல்; இணக்கப்பாட்டிற்கு அப்பால் பயணித்துத் தேசியக் கொள்கையின் அமுல்படுத்தலுக்கான தனியார் துறை உள்ளீடுகளின் செயல் திறன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு; சிறந்த செயல்முறைகளின் வெளியீடு; கழிவு முகாமைத்துவத்தில் பொதுத்-தனியார் கூட்டாண்மைகளில் ஒன்றுபடல்.

*(ஆ) கழிவுப் பாய்வுகளுடன் தொடர்புடைய பங்குதாரர் தொடர்புகள்*

| பொதுவான மற்றும் குறிப்பான கொள்கைகள் | பொறுப்பு |
|---|---|
| அனைத்துச் சுற்றாடல் அம்சங்கள் | சுற்றாடல் அமைச்சு / மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) |
| திண்ம, திரவ மற்றும் வாயுக் கழிவை உள்ளடக்கிய கொள்கைகள் | |
| திண்மக்கழிவு | |
| மாநகரக் கழிவு | **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், மேல் மாகாணக் கழிவு முகாமைத்துவ அதிகார சபை,** வடமேல் மாகாணச் சுற்றாடல் அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு, சுதேச மருத்துவ அமைச்சு, மாகாண சபைச் சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, நகரத் திட்ட மிடல் மற்றும் அபிவிருத்தி அமைச்சு, நகர அபி விருத்தி அதிகாரசபை, சுற்றாடல் பொலிஸ் |
| பொதியிடல் கழிவு | **சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை பொதியிடல் நிறுவனம், நுகர் வோர் அலுவல்கள் அதிகாரசபை,** நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை, சுகாதார அமைச்சு, இலங்கை கட்டளைகள் நிறுவனம், கைத் தொழில் தொழில்நுட்ப நிறுவனம், உள்ளூர் அதிகார சபைகள், மாகாண சபைகள், கல்வி/ உயர்கல்வி அமைச்சு |
| கைத்தொழில் கழிவு | **கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு, இலங்கை முதலீட்டுச் சபை,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கை மின்சார சபை, மின்சக்தி மற்றும் வலு விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக் களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப் பாட்டு திணைக்களம் |

| | |
|---|---|
| கட்டுமான மற்றும் இடிமானக் கழிவு | **மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபி விருத்தி அதிகார சபை, கட்டுமானக் கைத் தொழில் அபிவிருத்தி அதிகார சபை, அனைத்து உள்ளூர் அதிகாரசபைகள்,** கட்டுமானக் கைத் தொழில் நிறுவனங்கள், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம், சுற்றாடல் அமைச்சு |
| சுகாதார சேவைக் கழிவு | **சுகாதார/சுதேச வைத்திய அமைச்சு, ஆயுர் வேதத் திணைக்களம்**, மத்திய சுற்றாடல் அதி கார சபை, மேல் மாகாணக் கழிவு முகாமைத் துவ அதிகார சபை, அனைத்து உள்ளூர் அதி கார சபைகள், மாகாண சபைகள், மருத்துவ மற்றும் தொடர்புபட்ட பிற பீடங்கள், கால்நடை மருத்துவ நிறுவனங்கள்/மருந்தகங்கள், அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம், பிற சுகாதார நிலையங்கள், சுற்றாடல் அமைச்சு |
| மின்னியல் மற்றும் இலத்திரனியல் கழிவு (e-waste) | **சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதி கார சபை, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு,** இலங்கை முதலீட்டுச் சபை, கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, தொலைத் தொடர்பு விடயங்களுக் குப் பொறுப்பான அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், கல்வி/ உயர் கல்வி அமைச்சு, அனைத்துப் பல்கலைக் கழ கங்கள்/கல்வி நிறுவனங்கள், அனைத்து உள்ளூர் அதிகார சபைகள், மாகாண சபைகள் |
| கதிரியக்கக் கழிவு (திண்ம வடிவில்) | **இலங்கை அணுசக்தி அதிகார சபை, இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் அமைச்சு, இலங்கை சுங்கத் திணைக்களம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக் களம், சுகாதார/சுதேச மருத்துவ அமைச்சு |
| கடல்சார் கழிவு | **கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, துறை முகங் கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு, கரையோ ரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகா மைத்துவத் திணைக்களம், துறைமுக அதிகார சபை |

| | |
|---|---|
| உணவு, விவசாயம், மற்றும் கால்நடைக் கழிவு | **விவசாயத் திணைக்களம், கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகம்,** விவசாய அமைச்சு, உள்ளூர் அதிகார சபைகள், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுகாதார/ சுதேச மருத்துவ அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை தங்குமிடக் கூட்டுத்தாபனம், சுற்றுலாத்துறைச் சபை, உரச் செயலகம் |
| திரவக்கழிவு | |
| சாக்கடை மற்றும் கழிவுநீர் | **நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு விடயத்துடன் தொடர்புடைய அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, உள்ளூர் அதிகார சபைகள்,** மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம், சுகாதார/சுதேச வைத்திய அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விஞ்ஞானம் தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, மாகாண சபைகள் |
| கைத்தொழில்/ இரசாயனக் கழிவு/ திரவக்கசிவு மற்றும் வாகனச் சேவை நிலைய வெளிப்பாய்வு | **மத்திய சுற்றாடல் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,** கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, இலங்கை முதலீட்டுச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு, கல்வி அமைச்சு, உயர் கல்வி அமைச்சு, ஆராய்ச்சி நிறுவனங்கள், ஆய்வகங்கள், விவசாய அமைச்சு, அனைத்து வாகன சேவை நிலையங்கள், சுற்றாடல் அமைச்சு |
| பெற்றோலிய எச்சங்களுடனான வெள்ள நீரோட்ட மாசுபாடு, சுகாதார சேவைக் கழிவு வெளிப்பாய்வுகள், விவசாய இரசாயனங்கள் மற்றும் ஏனைய அதிகரித்துவரும் மாசாக்கிகள். | **விவசாய அமைச்சு, கிருமிநாசினிகள் பதிவாளர் அலுவலகம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மத்திய சுற்றாடல் அதிகார சபை,** சுகாதார/சுதேச மருத்துவ அமைச்சு, உள்ளூர் அதிகார சபைகள், சுற்றாடல் அமைச்சு, உரச் செயலகம் |

| | |
|---|---|
| உணவைக் கையாளும் நிறுவனங்கள் மற்றும் சமயலறைக் கழிவு (அசுத்த நீர்) | **மத்திய சுற்றாடல் அதிகார சபை, உள்ளூர் அதிகார சபைகள்,** தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, சுகாதார/சுதேச மருத்துவ அமைச்சு, மாகாண சபைகள், சுற்றுலாத்துறை அமைச்சு, தங்குமிடக் கைத்தொழில் துறை, இலங்கை தங்குமிடக் கூட்டுத்தாபனம், சுற்றாடல் அமைச்சு |
| கதிரியக்கக் கழிவுப் பொருட்கள் (திரவ வடிவில்) | **இலங்கை அணுசக்தி அதிகார சபை, இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் சபை,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் அமைச்சு, சுகாதார அமைச்சு |
| வாயுக் கழிவு | |
| கைத்தொழில் | **சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு,** கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இலங்கை முதலீட்டுச் சபை, மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், இலங்கை மின்சார சபை, மின்சக்தி மற்றும் வலு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு |
| வாகனங்கள் | **மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், போக்குவரத்து அமைச்சு,** விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| எரிகலன் (Incinerators) | **மத்திய சுற்றாடல் அதிகார சபை, கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, சுகாதார/சுதேச மருத்துவ அமைச்சு,** உள்ளூர் அதிகார சபைகள், தனியார் துறை மற்றும் பிற சேவை வழங்குநர்கள், சுற்றாடல் அமைச்சு |
| காணி நிரப்புகை | **மத்திய சுற்றாடல் அதிகார சபை, உள்ளூர் அதிகார சபைகள், நகர அபிவிருத்தி அதிகார சபை,** மாகாண சபைகள், சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |

| | |
|---|---|
| மலக்கழிவுத் தொட்டிகள்/ சாக்கடை நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் | **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, உள்ளூர் அதிகார சபைகள், மத்திய சுற்றாடல் அதிகார சபை,** தனியார் துறை மற்றும் பிற சேவை வழங்குநர்கள், மத்திய பொறியியல் ஆலோசனைச் செயலகம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்/ சுகாதார வைத்திய அதிகாரி, சுற்றாடல் அமைச்சு |
| திறந்தநிலை எரிப்பு | **மத்திய சுற்றாடல் அதிகார சபை, உள்ளூர் அதிகார சபைகள்,** பொதுச் சுகாதாரப் பரி சோதகர், சுகாதார வைத்திய அதிகாரி, சுற்றாடல் அமைச்சு, சுற்றாடல் பொலிஸ் (இணைப்பு 1ஐக் காண்க) |
| கப்பல்/ கடல்சார்/ மீன்பிடிக் கழிவு | **கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை,** கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வள அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீர் வாழ் வளத் திணைக் களம், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு, துறைமுக அதிகார சபை |
| சிறிய அளவிலான தீங்கு விளைவிக்கும் கைத்தொழில்கள் | **மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் அமைச்சு, கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு,** உள்ளூர் அதிகார சபைகள் |
| ஏனைய நிறுவன, நிருவாக மற்றும் முகாமைத்துவ அம்சங்களின் கீழான பொதுக் கொள்கைகள் | |
| அறிவு முகாமைத்துவம் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்புதல் | |
| கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டல் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கல்வி/ உயர்கல்வி அமைச்சு,** வெகுசன ஊடக அமைச்சு |
| திறன் விருத்தி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு, முன்மொழியப்பட்ட பயிற்சி நிறுவனம்,** மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு |
| தொழில்நுட்ப அபிவிருத்தி, பயன்பாடு மற்றும் இடமாற்றம் | சுற்றாடல் அமைச்சு, **விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, நிதி அமைச்சு,** கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, விவசாய அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வள அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, தேசிய தூய்மையான உற்பத்திகள் மத்திய நிலையம், மத்திய சுற்றாடல் அதிகார சபை |

| | |
|---|---|
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை, நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி அமைச்சு, நீர் வழங்கல் மற்றும் வடிகால-மைப்பு அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, சுகாதார/ சுதேச மருத் துவ அமைச்சு,** நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள் |
| ஏனைய துணைக் கொள்கைகள் மற்றும் தேசிய செயல் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் | **சுற்றாடல் அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,** தேசிய கொள்வனவு ஆணைக்குழு, சுகாதார/ சுதேச வைத்திய அமைச்சு, விவசாய அமைச்சு, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வள அமைச்சு, சுற்றுலாத் துறை அமைச்சு மற்றும் பிற முன்னணி நிறு வனங்கள் |
| நிறுவனப் பொறிமுறைகள், ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் | |
| தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் அதிகார சபை மட்டங்கள் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,** மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சு, பலதரப்புள்ள சுற்றாடல் ஒப்பந்தங்களின் கேந்திர நிலை யங்கள், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |
| அரச மற்றும் தனியார் துறை | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுகாதார அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபி விருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு** மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |
| சமூக மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,** மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |

| | |
|---|---|
| கூட்டாண்மைகளைக் கட்டியெழுப்புதல் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,** மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |
| பேரிடர் நிலைகளின் போது சுத்தம் செய்தல் மற்றும் கழிவு முகாமைத்துவம் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,** சுகாதார/ சுதேச மருத்துவ அமைச்சு, பேரிடர் முகாமைத்துவ அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், பேரிடர் முகாமைத்துவ நிலையம், பாதுகாப்பு அமைச்சு |
| கண்காணிப்பு, மதிப்பீடு, பின்னூட்டம் மற்றும் அறிக்கையிடல் | |
| கழிவு முகாமைத்துவச் செயல்முறைகள்/ முறைமைச் செயல்திறன் | **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சுகாதார/ சுதேச மருத்துவ அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாகாண சபைகள், உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |
| கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள் மற்றும் பிற சேவை வழங்குநர்களின் செயல்திறன் | **மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, சுகாதார/ சுதேச மருத்துவ அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு, தொழில் முயற்சி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, வர்த்தக அலுவல்கள் அமைச்சு,** மத்திய சுற்றாடல் அதிகார சபை, மாகாணசபைகள், உள்ளூர் அதிகார சபைகள், ஏனைய முன்னணி நிறுவனங்கள் |
| அமுலாக்கல் நிறுவனங்களின் செயல்திறன் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுற்றாடல் பொலிஸ்,** மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள் |
| பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள், சமூக அமைப்புகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகளின் பங்களிப்பு மற்றும் திருப்தி | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு,** மாகாண சபைகள், உள்ளூர் அதிகார சபைகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள் |

| | |
|---|---|
| முழு நாட்டினதும் தூய்மைத்தன்மை மற்றும் அழகியல் தோற்றம் | **நகர அபிவிருத்தி அதிகார சபை, உள்ளூர் அதிகார சபைகள், சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, வெகுசன ஊடக அமைச்சு, ஏனைய முன்னணி நிறுவனங்கள்** |
| சட்ட அமுலாக்கல் பொறிமுறைகள் | **சுற்றாடல் அமைச்சு, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுற்றாடல் பொலிஸ், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** |
| நிதிப் பொறிமுறைகள் மற்றும் நிதி அல்லாத ஊக்குவிப்புகள் | **நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் மற்றும் ஏனைய முன்னணி நிறுவனங்கள்** |
| சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சமவாயங்களுட னான இணக்கப்பாடு | **சுற்றாடல் அமைச்சு, மற்றும் பலதரப்புச் சுற்றாடல் ஒப்பந்தங்களின் கேந்திர நிலையங்கள்** |
| முன்னோக்கிய நடவடிக்கைகள் | **சுற்றாடல் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, ஏனைய முன்னணி நிறுவனங்கள்** |

குறிப்பு 1 : முன்னணி நிறுவனங்கள் தடித்த எழுத்துக்களினால் காட்டப் பட்டுள்ளன. மேலே பட்டியலிடப்படாத ஏதேனும் தொடர்புள்ள நிறுவனங்கள் தொடர்புள்ள முன்னணி நிறுவனங்களினால் ஒருங்கிணைப்புச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு 2 : கழிவு முகாமைத்துவத்தில் சுற்றாடல் பொலிஸானது முக்கிய பங்கு வகிக்கின்றது. முன்னணி நிறுவனங்களினால் தொடர் புள்ள சட்டங்களின் ஊடாக அதன் சாத்தியக்கூறுகள் விரிவாக் கப்பட வேண்டியுள்ளன.

குறிப்பு 3 : பாதுகாப்பு அமைச்சானது பேரிடர் நிலைமைகளை முகாமைத் துவம் செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பேரிடர் நிலைகளின் போது பொருத்தமானதாக முன்னணி நிறுவனங் களினால் தொடர்புள்ள சட்டங்களின் ஊடாக அதன் சாத்தியக்கூறுகள் விரிவாக்கப்பட வேண்டியுள்ளன.

இணைப்பு 2

## வரைவிலக்கணங்கள்

இக்கொள்கையில் **கழிவு** என்பதன் மூலம் குறிப்பிடப்படுவது விலக்கப்படுகின்ற அல்லது அழிக்கப்படுகின்ற அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது வடிவத்தில் தொடர்ந்தும் பயன்பாட்டுக்குத் தேவைப்படாது எனக் கருதப்பட்டு வளமாகப் பயன்படுத்தப் படக்கூடிய அல்லது பயன்பாட்டுப் பெறுமதி அற்றதாயின் சுற்றாடல் ரீதியாகச் சிறந்த முறையில் சுத்திகரிக்கப்பட்டு அகற்றப்படக்கூடிய ஏதேனும் ஒரு பொருள் அல்லது பக்க விளைபொருளாகும்.

(தேசிய சுற்றாடற் சட்டத்தின் வரைவிலக்கணத்தை ஒரு குடையாகக் கொண்டு இக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு கருவியாக இவ் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. தேசிய சுற்றாடற் சட்டத்தின் கீழ், ''கழிவு'' எனப்படுவது கழிவு எனப் பரிந்துரைக்கப்படுகின்ற யாதாயினும் ஒரு பொருள் மற்றும் திரவமாகவோ, திண்மமாகவோ, வாயுவாகவோ அல்லது கதிரியக்கத் தன்மையுள்ளதாகவோ இருக்கின்ற யாதாயினும் ஒரு பொருள், அல்லது சுற்றாடலில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கனவளவில் வெளியேற்றப்படுகின்ற அல்லது படிவாக்கப்படுகின்ற தொகுதி அல்லது பொருள் ஆகும்.)

**சுற்றாடல் நேயமிக்க கழிவு முகாமைத்துவம்** எனப்படுவது கழிவானது அக்கழிவிலிருந்து விளைவாக்கப்படக்கூடிய பாதகமான விளைவுகளுக்கு எதிராக மனித சுகாதாரம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் வகையில் முகாமை செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான அனைத்துச் செயற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாகும்.

**வாழ்க்கை வட்ட முகாமைத்துவம்** எனப்படுவது உற்பத்தி அல்லது உற்பத்தித் தொகுப்புடன் தொடர்புடைய சுற்றாடல் மற்றும் சமூக-பொருளாதார அழுத்தங்களை அதன் ஒட்டுமொத்த வாழ்க்கை வட்டம் மற்றும் பெறுமதிச் சங்கிலி முழுவதும் குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது (ஒப்பீட்டு அனுகூலத்தை ஒரு கம்பெனி உருவாக்குவதற்குப் பயன்படுத்துகின்ற ஒரு தொகுதி இடைத்தொடர்புள்ள செயற்பாடுகள்).

**பொருத்தமான தொழில்நுட்பம் என்பது**, தேவையினை நிறைவேற்றிக் கொள்வதற்காக அது உதவக்கூடிய சமூகத்துடன் சிறப்பாகப் பொருந்தக் கூடிய தொழில்நுட்பமாகும்.

**'மாசுபடுத்துபவர் செலுத்துவார்' கோட்பாடு** எனப்படுவது சூழல் மாசடைவதற்குக் காரணமாக அமைகின்ற நபர்கள் அதன் ஊடாக மனித சுகாதாரத்திற்கு அல்லது சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய சேதத்தைத் தடுப்பதற்காக அதனை முகாமைத்துவம் செய்யும் செலவினத்தைப் பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும்.

**விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பொறுப்பு** எனப்படுவது ஒரு உற்பத்தியின் வாழ்க்கை வட்டத்தின் பின்-நுகர்வுப் படிநிலை வரை உற்பத்திக்கான உற்பத்தியாளரின் பொறுப்பு விரிவாக்கப்பட்ட சுற்றாடற் கொள்கை அணுகு முறையாகும்.

**முழுமையான ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவம்** எனப்படுவது பல்வேறு கழிவு வடிவங்களுடனான இடைத்தொடர்புகளை உள்ளடக்குகின்ற ஒருங் கிணைந்த கழிவு முகாமைத்துவம் ஆகும்.

**மகிழ்ச்சியான குடும்பம்** எனப்படுவது நம்பகத்தன்மைமிக்க திருப்திகரமான மகிழ்ச்சியுடனான குடும்பம் ஆகும். (மாசடைதல் குறைக்கப்பட்ட சுற்றாடலில் வாழும் குடும்பம்)

**ஜி.பி.எஸ். (GPS) முறைமை** எனப்படுவது ‘‘புவியிடங்காட்டி முறைமை’’ ஆகும்.